# மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 6—இதழ் 33 ★ 15-12-57 சென்னை ★ விலை 16 காசு


# ★ சிவாஜிக்குச் சிலை! மராட்டியத்திற்குச் சிறை!

—(o)—

## புதிய "டில்லி பாதுஷாக்களின்" தான்தோன்றி தர்பார்!

—(o)—


இரா. செழியன்


"சிவாஜி! சிவாஜி!"

எங்கிருந்தோ அந்தக் குரல் கேட்கிறது!

"சிவாஜி! சிவாஜி! சிவாஜி!" பலர் கூப்பிடுகின்றனர்; பலர் பல சமயங்களில் பல்வேறு உணர்ச்சிகளுடன் அந்தப் பெயரைச் சொல்லியிருக்கின்றனர்!

"சிவாஜி"—கனிவுடன் தாய் அழைத்திருக்கிருள்.

"சிவாஜி!"—கண்டிப்புடன் தந்தை கூப்பிட்டிருக்கிறார்.

"சிவாஜி!"—பரிவுடன் தோழர்கள் அழைத்தனர்.

"சிவாஜி!"—பூரிப்புடன் வீரர்கள் வந்தனர்.

"சிவாஜி!"—ஆச்சரியத்துடன் சிற்றரசர்கள் கேட்டார்கள்.

"சிவாஜி!"—அச்சத்துடன் சுல்தான்கள் பார்த்தார்கள்.

"சிவாஜி!"—கோபத்துடன் டில்லி மொகலாயச் சக்ரவர்த்தி பேசினர்.

"சிவாஜி!"—ஆரவாரத்துடன் மராட்டிய மண்டலம பெருமைப்பட்டது.

"சிவாஜி"—அந்தப் பெயர் மங்கிக்கிடந்த வீரத்தைத் தட்டி எழுப்பியது! மயங்கிக் கிடந்த மக்களைப் போர்க்களத்துக்கு அழைத்தது! மராட்டியம் என்ற புதிய மண்டலத்தை அமைத்துத் தந்தது!

"சிவாஜி"—அந்தப்பெயரே ஒரு வீரமுழக்கமாயிற்று! அந்தப் பெயரே ஒரு போர் முரசாயிற்று! அந்தப் பெயரே ஒரு நாட்டு மக்களின் விடுதலை கீதமாயிற்று!

"சிவாஜி" அந்தப் பெயர் கேட்டதும், ஏர் பிடித்தவர்கள் வாள் பிடித்தார்கள்! ஆடு மாடு மேய்த்தவர்கள் யானைப் படைகளை நடத்திஞர்கள், குதிரைவீரர்களானார்கள்! தாழ்த்தப்பட்டுக்கிடந்த மகார்ப் பெருங்குடி மக்கள் மாவீரர்களாசக் கிளம்பினர்கள்!

"சிவாஜி"—அவன் பார்வைபட்டுக் குடிசைகள் கூடாரங்களாயின; குன்றுகளின் மேல் கோட்டைகள் எழுந்தன! பிரதாப்கார், கல்யாண், புரந்தர், தோர்ணு, ராஜகிரி,—இவ்வாறு அவனுடைய வீரத்தின் அறிகுறியாகக் கோட்டை வரிசைகள் தோன்றின!

சிவாஜியின் வளர்ச்சி டில்லியில் இருந்த மொகலாயச் சக்ரவர்த்தியின் கோபத்தைக் கிளரியது! "மலையில் நுழைந்துகொள்ளும் எலியைப் பிடித்துவா!" எனப் படைத்தலைவர்களை அனுப்பினர்! எலியைப் பிடிக்கச் சென்றவர்கள், மராட்டியத்தில் ஒரு புலி உலவுவதைக் கண்டு பின்வாங்கி வந்தனர்! போர்க்களத்தில் காணமுடியாத வெற்றியைப் பெற சிவாஜியைச் சூழ்ச்சியால் சிறைபிடித்தனர்! சிவாஜி அந்தச் சூழ்ச்சியையும் மீறி, சிறைச்சாலையைவிட்டு வெளியேறினன்! மராட்டியத் தனியரசு மலர்ந்தது!

அந்த மாவீரன் மறைந்துபோய் சில நூற்றாண்டுகள் கடந்து விட்டன. சிவாஜிக்குப் பின் அவன் அமைத்த மராட்டியத்தில் பலவித மாறுதல்கள் நிகழ்ந்துவிட்டன, அவன் உண்டாக்கித் தந்த அரசு அழிந்துவிட்டது. அவன் எடுப்பித்த கோட்டைகள் புழுதி படிந்து கிடக்கின்றன!

அழிந்தும்—அழியாத வீரத்தின் சின்னமாக விளங்கும் அந்தக் கோட்டைகளின் அருகே, இன்று சிவாஜிக்குச் சிலை எடுக்கின்றனர்!

சிவாஜிக்குச் சிலை! மராட்டியத்தைக் கண்டெடுத்த மாவீரன்—மாற்றார்களை அந்த மண்ணிலிருந்து விரட்டியடித்த தீரன்-சாத்பூரா மலைச் சாரலிலே புதிய அரசை உண்டாக்கிய சத்ரபதி-சிவாஜிக்குச் சிலை எடுக்கிறார்கள்! அதிலும் அந்த மன்னனின் வீரமுழக்கங்களைக்கேட்டு எதிரொலித்தபிரதாப்கார் கோட்டை அருகே சிலை! மராட்டியம் அதை நினைத்து மகிழ வேண்டாமா? மராட்டிய மக்கள் அந்தச் சிலையை மனங் குளிரக்கண்டு ஆரவாரிக்க மாட்டார்களா?

பிரதாப்கார் கோட்டை அருகே சிவாஜியின் சிலை திறக்கப்பட்டது! ஆனல் மராட்டியத்தில் மகிழ்ச்சியில்லை, மராட்டிய மக்களின் முகங்களில் குதுகலமில்லை!

"சத்ரபதி சிவாஜி!" அந்தப் பெயரைச் சொல்லும் பொழுது, மக்கள் குரலில் களிப்பு இல்லை, வேதனை ஒலிக்கிறது!

சிவாஜியின் வீரத்தை அவர்கள் மறந்துவிட்டார்களா? மராட்டிய உரிமை வரலாற்றை ஆரம்பித்து வை... வலை அவர்கள் மறந்து விட்ட இல்லை, மறக்க வில்லை! ...தான அவர்கள வேதனைப்பட... னர், சோகத்திலாழ்ந்துள்ளனர்!

சிவாஜியின் வீரம் அவர்களை... கிறது! பழைய உரிமை வரல... பொழுது உரிமையிழந்த... நிலையைச் சுட்டிக் காட்டுகிறது

பெரியதொரு சாம்ராஜ்ய... அமைத்து கோலாகலமாக டில்... பாதுஷாக்கள் ஆண்டனர்! மரா... யத்தைஅடக்கிவிட அந்த மொகலா... பேரரசு அன்று முயன்றது!

இன்றைக்கு அதே டில்லியில் புதிய... பேரரசு உருவாகியிருக்கிறது அன்றைக்கு... டியத்தின் எழுச்சியை டில்லி பாதுஷா... அடக்க நினைத்தது போல, இன்றுள்ள பு... "டில்லி பாதுஷாக்கள்" இன்றைய மராட்... ன் எழுச்சியை அடக்க நினைக்கிருர்கள்.

சிவாஜியின் சிலையைப் பார்க்... பொழுது, மராட்டியத்துக்கும் டில்... தர்பாருக்கும் மூண்ட போராட்... மராட்டியர்களுடைய கவனத்து... வராமற் போகாது!

**சிவாஜியின் சிலை திறக்கப்படுகிறது ஆ... மராட்டியம் சிறையில் தள்ளப்பட்டிருக்கிறது**

**சிவாஜியின் சிலை திறக்கப்படுகிறது ம... டியத்தைச் சிறையில் தள்ளிய "டி... பாதுஷா" சிவாஜியின் சிலையைத் திறக்க... கிருர்!**

இந்தச்செய்தியால் மராட்டியர்களி... வேதனை அதிகரித்தது! வெ... புண்ணில் வேல்பாய்ச்சப்படுவதுபோ... மராட்டியத்தை அடக்கி வைத்... அவர்களுடைய மாவீரனுக்குப் பு... பாட அவர் வந்தார்!

**சிவாஜியின் சிலை திறக்கப்படுவதற்கு, ... மராட்டியத்தை அடைத்து வைத்திருக்... சிறை திறக்கப்படவேண்டும்.**

மராட்டிய மாதாவைச் சிறை... போட்டு விட்டு, மராட்டிய வீரனுக்... துதிபாட வந்தால் மக்கள் எப்ப... தான் ஒப்புவார்கள்?

புதிய "டில்லி பாதுஷாக்களி... ஆட்சி கோலாகலமாக நடைபெ... றது! சாம்ராஜ்யங்களை ஆண்ட எ... சாதிகாரிகளுக்கு இருப்பதை... போன்ற ஆணவம், நினைத்ததைச் ... யும் போக்கு இருக்கிறது! சாம்ராஜ்... கள் இருந்ததை வரலாறு கூறுவ... போல, அந்தப் பெரிய சாம்ராஜ்யங்... சரிந்ததையும் அதே வரலாறு... கூறுகின்றன!

சரிந்த சாம்ராஜ்யங்கள்! மறை... எதேச்சாதிகாரிகள்! இன்றைக்... டில்லி பாதுஷாவாகவுள்ள பண்... நேருவுக்கு இவைகள் தெரியாமலி... காது! அவர் "உலக வரலாற்றின் ... மிகு காட்சிகளைக் ... தங்களின் மூலம் த... வர்; "இந்தியாவை... கண்டு பிடித்தவ... மக்களின் மனவெ... சியை எதேச்சாதிகாரப் போக்... அடக்கிவிட முடியாதென்பதை ம... வர்களை விட பண்டித நேரு நன்று... தெரிந்திருக்க வேண்டும்! மக்களின் ... மையை மறுத்த மன்னர்கள் விரட்... டிக்கப்பட்ட வரலாறுகள் இருக்கி... றன!


(12-ம் பக்கம் பார்க்க)

ஓரங்க நாடகம்—(சென்ற இதழின் தொடர்ச்சி)

# அவமானம்

(இரா. இளஞ்செழியன்)

காட்சி 8

[பொன்னம்பல முதலியார் வீடு. பொன்னம்பல முதலியார் பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார். கற்பகம் வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறாள். சேகர் வருகிறான்.]

ான்: ஏன் இத்தனை நாழி?

ர்: எங்க காலேஜ் புரொபசர் வீடு வரை போயிருந்தேன் அதனால் கொஞ்சம் நேரமாகிவிட்டது.

ான்: சரி, இப்படி உட்கார்.

[சேகரன் உட்காருகிறான்]

ான்: நான் போய் வந்த விஷயத்தைச் சொல்லு கற்பகம்!

[பேப்பர் படிப்பதில் ஈடுபடுகிறார்.]

ு: ஏன் நீங்களே சொல்லுங்களேன்!

க: என்னம்மா? நீங்கள் தான் சொல்லுங்களேன்!

: உனக்குப் பெண் பார்த்திருக்கு. பார்க்க நல்லாயிருக்கு, படித்த பெண்ணும், போட்டோகூட வந்திருக்கு.

[ஒரு படத்தை சேகரிடம் கொடுக்கிறாள்.]

க: இதற்குள் ஏன் அவசரப் பட்டீர்கள்! எனக்கு இந்தப் பெண் வேண்டாம்.

ான்: ஏண்டா, பெண்ணுக்கு என்ன குறைச்சல். பெரிய இடத்துச் சம்பந்தம். அவருக்கு ஒரே பெண்; நீ சம்மதித்தால் அவருடைய சொத்து முழுவதும் உனக்குத்தான்! அவருக்குச் சொந்தமான வீடுகள் மட்டும் மூன்று லட்ச ரூபாய்க்கு இருக்கு! மேலும்......

க: அப்பா! கோடீஸ்வரன் வீட்டுப் பெண்ணாயிருந்தாலும் சரி எனக்கு வேண்டாம்.

ான்: என்னடாது? நேற்று கல்யாணத்திற்கு சரி என்று சொன்னாய்?

க: ஆமாம்! திருமணம் இந்த வருஷமே நடத்தி விடலாமென்று சொன்னேன். எனக்குப் பிடித்த பெண்ணாக இருந்தால் இப்பொழுதே கல்யாணத்திற்குத் தயார்!

ான்: இது நல்ல சம்பந்தமடா! அவர்களுக்கு நான் வாக்குக்கூட கொடுத்து விட்டேன். இந்தக் கல்யாணம் நடைபெறு விட்டால் என் மானம் போய்விடும்.

க: அப்படிக் கல்யாணம் நடைபெற்றால் என் மானம் போய்விடும்.

ான்: என்னடாது?

க: ஆமாம்! நான் ஒரு பெண்ணைக் காதலித்திருக்கிறேன்! அவளைக் கைவிட முடியாது! அவளுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன்.

ான்: கற்பகம்! என்னால் இனி பேசமுடியாது. நீயே ...ன்.

கற்ப: சரி, அந்தப் பெண் யாருன்னு சொல், நல்ல இடமாயிருந்தால் பார்ப்போம்!

பொன்: இவன் காதலிக்கிறானென்றால் நல்ல இடத்துக்காப் போவான்!

சேக: அப்பா! நான் முடிவாகக் கூறிவிடுகிறேன். மணந்தால் அடுத்த வீட்டுப் பெண் வனிதாவைத்தான் மணப்பேன். இல்லையென்றால் வேறு எவரையுமே மணக்கப் போவதில்லை!

[சேகர் எழுந்திருக்கிறான்.]

பொன்: அந்த ஓடுகாலியா! அவமானம்! அவமானம்!

கற்: என்னப்பா சேகர்! அந்தப் பெண்தான் எங்கோ ஓடி விட்டதாகச் சொன்னார்களே!

சேக: என்னுள்ளத்திலிருந்து அவள் ஓடிவிடவில்லையம்மா!

பொன்: டேய்! நிறுத்துடா! உன் காதல் கீதத்தை இங்கே பாடாதே! நான் என் முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. நாளை காலைக்குள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்து விடு. என் முன் நிற்காதே போ! கற்பகம்! நீயே உன்மகனுக்கு வேண்டிய புத்திமதியைக் கூறு.

[கற்பகம் சேகரை அழைத்துச் செல்கிறாள்.]

காட்சி 9

[போலீஸ் ஸ்டேஷன். சப் - இன்ஸ்பெக்டர் வருகிறார். ஹெட் கான்ஸ்டபிள் சல்யூட் அடித்து நிற்கிறார்.]

சப்-இன்ஸ்பெக்டர்: என்ன, அந்தப் பெண் விஷயம் பெரிய தலை வேதனையாகப் போய் விடும் போலிருக்கே! ஏதாவது தகவல் கிடைத்ததா?

ஹெட் கான்ஸ்டபிள்: அந்தப் பெண்ணைப் பற்றிய தகவல் இல்லை. ஆனால் நம்ம 311-ம் 402-ம் வேறு நான்கு பெண்களை அழைத்து வந்திருக்கிறார்கள்.

சப்: சுத்த மடையனுங்க! அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்கச் சொன்னால் மற்றவர்களை அழைத்து வந்து என்ன செய்கிறது?

ஹெட்: இல்லீங்க, இந்தப் பெண்களும் வீட்டிற்குத் தெரியாமல் வெளியேறியவர்கள்.

சப்: வாட்? வாட்?

ஹெட்: ஆமாங்க, அந்தப் பெண்ணைத் தேடப் போக, இவர்கள்தான் கிடைத்தார்கள்.

311! அவர்களை அழைத்து வா!

[நான்கு பெண்களை 311 அழைத்துக் கொண்டு வருகிறான்.]

சப்: ஏன் இவர்கள் வீட்டை விட்டுக்கிளம்பி விட்டார்கள்?

ஹெட்: எல்லாம் வீட்டிற்குள் நடக்கும் சண்டைதான் காரணம்.

சப்: சரி, 311! இவர்களை அவரவர் வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு கொஞ்சம் சமாதானம் செய்து வைத்து விட்டு வா.

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிடர்க் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாக இணைவது விரைவில் சாத்தியமே எனப் பெரியாரவர்கள் தஞ்சையில் கூறியதாகச் சில பத்திரிகையில் வந்திருப்பது குறித்து என் கருத்தைத் தெரிவிக்கும்படி ஒரு தோழர் கேட்டிருக்கிறார்.

இந்த செய்தி எவ்வளவு தூரம் சரி என்பது எனக்குத் தெரியாது. எந்தச்சந்தர்ப்பத்தில் அவ்வாறு சொன்னார்; எந்தப் பொருள்பட அதைச் சொன்னார், எதற்காகச் சொன்னார், ஏன் அப்படிச் சொன்னார்—இவைகளெல்லாம் தெரிய வில்லை. பெரியார்தான் அப்படிச் சொன்னாரா, அல்லது பெரியார் அப்படிச் சொன்னதாகப் பத்திரிகை நிருபருக்குத் தோன்றியது செய்தியாக வந்திருக்கிறதா—அதுவும் தெரியவில்லை.

வந்திருக்கும் செய்தி உண்மையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதுபற்றி என் கருத்தைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன். பெரியார் அவர்கள் பார்த்து "வாடா, அண்ணுதுரை!" என்றால், நான் என்ன செய்வேன் என்பதை அறிந்து கொள்ள நீங்கள் ஆர்வத்துடன் இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன்! நானும் மற்றத் தோழர்களும் ஏழெட்டு ஆண்டுகளாக நடத்திவரும் கட்சியின் எதிர் காலத்தைப்பற்றி யோசிக்காமல் போய்விட முடியாது!

இரண்டு கழகங்களும் இணைவது என்றால் எந்தெந்த குறிக்கோள்கள், கொள்கைத் திட்டங்கள் என்பதைப் பற்றிய தெளிவு இருக்கவேண்டும். இப்பொழுது திராவிடர்க் கழகத்துக்கு இருக்கிற திட்டங்கள்தாம் இருக்கும் நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு வரவேண்டும் என்றால், நாங்கள் அதற்கு உடன்பட முடியாது. நாம் திராவிடர்க் கழகத்திலிருந்து வெளியேறியபோது என்னென்ன திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து நாங்கள் இருந்தோமோ, அவைகளுக்கு நாங்கள் பணிய முடியுமேயன்றி, நாங்கள் வெளியேறிய பின் அவர்கள் தீட்டிக் கொண்ட நானாவிதத் திட்டங்களுக்கு நாங்கள் உடன்பட மாட்டோம்! எங்கள் உடன்பாடே இல்லாமல், எங்களைக் கலந்தாலோசிக்காமல், எடுக்கப் பட்ட முடிவுகளை அவர்கள் வைத்துக் கொண்டுள்ளார்கள்! அந்த முடிவுகளையெல்லாம் ஒப்புக்கொண்டு அங்கு நாங்கள் வருவோம் என்று கருதுவது தவறு!

தனிப்பட்ட நபர்களிடம் குரோத உணர்ச்சி பாராட்டுவதை நான் அன்றும் ஆதரித்ததில்லை, இன்றும் ஆதரிக்க வில்லை! பார்ப்பனீயம் கூடாது என்று பேசப் பட்ட போதிலும், பார்ப்பனர்களிடம் பகைமை யுணர்ச்சி காட்டுவதை நாங்கள் ஆதரிக்கவில்லை. இன்றைய தினம் ஈயம், பித்தளை என அந்தப் போக்கு பழிக்கப்பட்ட போதிலும், அன்று நாங்கள் திராவிடர்க் கழகத்தில் இருந்த பொழுது அந்த ஈயம் பித்தளைக் கொள்கை தாம் வலியுறுத்தப்பட்டன! தொண்டை மண்டலம் பள்ளியில் இந்தி எதிர்ப்பு துவங்க இருந்த நேரத்தில், பெரியார் அவர்கள் பிராமணர் சமுதாயத்துக்கு விடுத்த வேண்டுகோளில் "திராவிட நாடு கிடைத்தால் தங்கள் கதி என்ன ஆகுமோ என்று பிராமணர்கள் பயப்பட வேண்டாம். திராவிட நாட்டில் இருப்பவர்கள் அனைவரும் திராவிடர்கள்" என்றப் பொருள் பட எழுதினார் அந்தக் கொள்கையை நாங்கள் இன்றும் கடைப் பிடிக்கிறோம்!

சாதிப்பாகுபாடு பற்றிய உயர்வு-தாழ்வு உணர்ச்சி பார்ப்பனரல்லாதார்களிலும் பலரிடம் இருப்பதைக் காண்கிறோம். அது மட்டும் ஏற்றுக் கொள்ளத் தக்கது என நினைப்பது தவறு!

—சென்னை-இராயப்பேட்டைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணு!

மன்றம்

ஞாயிறு 15—12—57 சென்னை

# எதேச்சாதிகாரச் சட்டம்!

★

தடுப்புக் காவல் சட்டம் மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு உயிர்பெற்றுள்ளது!

தடுப்புக் காவல் சட்டத்தின் மூலம், நீதி விசாரணையின்றி ஒருவரைச் சிறையில் வைக்கக் கூடிய அதிகாரம் அரசாங்கத்துக்குக் கிடைக்கிறது! வழக்கமாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் வழக்காடும் உரிமைகள் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைதானவருக்குக் கிடைக்காது! சாட்சிகளைக் கொண்டு வருவது, அவர்களைக் குறுக்கு விசாரணைகள் செய்வது, குற்றச்சாட்டுக்களுக்கு மறுப்புத் தருவது - இவை போன்று சட்ட பூர்வமான முறைகள் எதற்கும் தடுப்புக் காவல் சட்டத்தில் இடங் கிடையாது. அரசாங்கத்துக்குப் பட்டால், ஒருவரைப் பிடித்து இந்தச் சட்டத்தின் கீழ் விசாரணையின்றி அடைத்து விடலாம். சட்டம் சரியாகப் பயன்படுத்தவேண்டுமென்பதற்குச் சில பாதுகாப்புகள் காட்டப்பட்டபோதிலும் சட்டத்தின் மூலம் தரப்படுகிற எதேச்சாதிகாரத்துக்கு முன் அவை பலமின்றி இருக்கின்றன!

தடுப்புக் காவல் சட்டம் ஜனநாயகப் பண்பாட்டுக்கு முற்றிலும் மாறுபட்டது! அத்தகைய சட்டத்தை வைத்துக் கொள்ள "ஜனநாயகக் குடியரசு" என்று கூறிக்கொள்கிற எந்த நாடும் வெட்கப்படவேண்டும். அத்தகையக் கருப்புச் சட்டம்-எதேச்சாதிகாரச் சட்டம் ஒரு நாட்டின் சட்டப் புத்தகத்தில் காணப்படுவது ஒரு களங்கம் ஆகும்!

தடுப்புக் காவல் சட்டம் ஜனநாயகப் பண்புக்கு விரோதமானது என்பதை, அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்களே நன்கு உணர்கிறார்கள். அதனால் தான், மிகவும் தயங்கித் தயங்கி சட்டத்துக்கு உயிர்ப் பிச்சைக் கேட்க வேண்டியிருக்கிறது! சட்டம் நேர்மையாக இருக்கிறது என அவர்களால் வாதாட முடியவில்லை, சட்டம் அவசியமாக இருக்கிறது என அவர்கள் கூறுகிறார்கள்! சட்டத்தை முதன் முதலில் கொண்டுவந்தவர் "இரும்புத் தலை" எனக் கொண்டாடப்பட்ட வல்லபாய் படேல் ஆவார்கள்! அந்தக் கடின சித்தமுடைய வல்லபரே, தடுப்புக் காவல் சட்டத்தைக் கொண்டு வரும்பொழுது, பல இரவு தனக்கு உறக்கம் பிடிக்கவில்லை எனக் கூறியிருக்கிறார்!

தடுப்புக் காவல் சட்டம் ஆரம்பத்தில் தற்காலிகமாக ஏற்படுவதாகக் கூறினார்கள்! ஆனால் முதலில் "ஓராண்டு தற்காலிகமாக" எனக் கூறப்பட்டது, ஓராண்டு முடிந்ததும் மீண்டும் நீடிக்கப்பட்டு, இரண்டாண்டு, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வாய்தா வாங்கப்பட்டு, ஆக மொத்தத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் அந்த கொடுங்கோல் சட்டம் ஆட்டிப்படைக்க விடப்பட்டு விட்டது!

எப்பொழுதும், "தற்காலிகமாக" எனத் தரப்படுகிற எந்த அதிகாரத்தையும் ஆட்சியாளர்கள் சுலபத்தில் திருப்பித் தர இசைய மாட்டார்கள்! அதிகார பலத்தைப் பிரயோகித்துப் பழக்கப் பட்டவர்களுக்கு, அந்த அதிகாரத்தை நீடித்து வைத்துக் கொள்ளவே ஆவல் பிறக்கும்! அதிகார போதை அத்தகையது. வலியை மறைக்க அபினைச் சாப்பிடப் பழகியவன், வலி இல்லாத பொழுது

கூட அபின் சாப்பிடுவதை நிறுத்த மாட்டான்! வ
மாற்ற வகையே இல்லையா என்றால், அது தான் சரி
முறையில் எடுத்துக் கொள்ளுகிற மருந்து, அதுவும்
தேர்ச்சி பெற்ற டாக்டரால் ஆராயப்பட்டு தரப்ப
மருந்து! சாதாரணமாக, குற்றங்களைத் தடுக்க-சமுத
தில் ஏற்படும் "வலிகளை" மாற்ற, நீதிபதி என்ற டா
ஆராய்ந்து, நோயாளியை நன்கு பரிசோதித்து, பி
ஒழுங்கான சட்டம் என்ற அளவில் மருந்திட்டு, வலியை
போக்குகிறார்! நீதி விசாரணைக்குட்பட்டுத் தரப்படு
சட்டம் மருந்தைப் போலிருந்தால், தடுப்புக் காவல் சட்
போன்றவைகள் வலி உடனே மறைய முறை தெரியா
வன் தருகிற அபினைப் போலிருக்கிறது! அபின் பழக்
பட்டவன் மீண்டும் மீண்டும் அபினைத் தேடியலைவதுபோ
தடுப்புக் காவல் சட்டத்தை ஒரு முறை போட்டதும், மீண்
டும் மீண்டும் அதைப் பெற அரசாங்கத்தினர் கருத்தா
ருக்கின்றனர்!

அபின் ஆரம்பத்தில் வலி தீர்ப்பதாகப் பட்டபோ
தும் பின்பு அதுவே உடலைக் கெடுக்கும் நஞ்சாக மா
வதுபோல, தடுப்புக் காவல் சட்டங்கள் ஆரம்பத்தி
தேவையாகப் பட்டபோதிலும் வரவர ஜனநாயக அடிப்
டைக்கும் பெருங்கேடாக முடிகின்றன!

வெள்ளைக்காரன் காலத்தில் எந்தெந்தச் சட்டங்க
எதேச்சாதிகாரமானது எனக் காங்கிரசுக்காரர்கள் எதிர்
தார்களோ, அவற்றை விடக் கடுமையான "ஆள் தூக்கி
சட்டங்களை காங்கிரசு அரசாங்கம் கொண்டு வந்திருக்
றது! கிருபளானி அவர்கள் குறிப்பிட்டார்கள் "இத்தகைய
சட்டத்தைக் காங்கிரசு கொண்டுவருகிறது என்பது மிகவு
வருந்தத் தக்கது. இத்தகையச் சட்டங்களைத்தான் முன்
நாம் கருப்புச் சட்டமென்றும், சட்ட வரம்பில்லாத சட்
களென்றும் கண்டித்திருக்கிறோம். ஆனால் வரலாறு மிக
துயர் தரும் விதத்தில் திரும்ப வருகிறது. அடக்கப்பட்டு
கொடுமைப் படுத்தப்பட்டவர்கள் நிலைமை மாறி அதிகார
திலிருக்கும் வாய்ப்பைப் பெற்றால், அவர்களே மற்றவ
களை அடக்கவும் கொடுமைப் படுத்தவும் முற்படுகிறார்க
என்பது தெரிகிறது!" காங்கிரசுக் கட்சியில் நீண்டகால
பணியாற்றி, தற்பொழுது காங்கிரசை விட்டு விலகி
நேரத்திலும் அடிப்படை வேற்றுமைகள் பாராட்டாமலு
இருக்கிற கிருபளானி போன்றவர்கள் மனம் வருந்தி
கூறும் விதத்தில், காங்கிரசு அரசாங்கம் கொண்டுவருகி
எதேச்சாதிகாரச் சட்டங்கள் இருக்கின்றன!

சட்டத்தின் கீழ் 1950இல் 11000 பேர்கள் கைதியா
கப்பட்டதையும் 1957இல் இதுவரை 250 பேர்கள் தா
கைதியாக்கப் பட்டுள்ளனர் என்ற கணக்கையும் தந்
இவ்வாறு எண்ணிக்கை குறைந்து வருவது சட்டம் இருந்
தால் தான் என டில்லி மந்திரி வாதிட்டுள்ளார்! பதினோ
யிரத்திலிருந்து இரு நூற்றைம்பது அளவுக்குக் குறைந்
தற்கு, அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட பல்வேறு மா
றங்கள் காரணமாக இருந்திருக்கின்றன! எண்ணிக்கை
குறைவைக் காட்டி சட்டம் தேவை என இப்பொழுது ம
திரி கூறுகிறார்! இதற்கு மாறாக, கைதாக்கப்பட்டவ
தொகை அதிகமாகியிருந்தால், "முன்பிருந்ததை வி
இந்தச் சட்டம் இப்பொழுது இன்னும் அதிகமாக
தேவைப்படுகிறது" எனக் கூறியிருப்பார். ஆக, அந்
நிலையிலும் கைதாக்கப்பட்டவர்கள் எண்ணிக்கைக் குறை
தாலும் கூடினாலும், சட்டம் இருக்கவேண்டுமென்பதற்
அதைக் காரணமாக்கிவிடலாம்!

தடுப்புக் காவல் சட்டங்கள் நீடிப்பதானது, ஆட்சிய
ளர்களின் எதேச்சாதிகாரத் தன்மையை அதிகரிப்ப
தாகும். இது ஜனநாயகப்பண்புக்கு மாறுபட்டது. என
அரசாங்கத்தின் போக்கை ஜனநாயகத்தில் நம்பிக்கை
யுள்ளவர்கள் கண்டிக்கவேண்டும்!

# கவலைப்படவேண்டாம்!"

## கக்கன் அபயம் தருகிறார்!

## "அடுக்கும்", மொழியாளரும் "அடுக்காத" மொழியாளரும்!

கவலைப்பட வேண்டாம்!-" ...வ்வாறு மந்திரி கனம் கக்கன் ...வர்கள் அறிவித்துள்ளார்!

...உலகில் பலவிதக் கவலைகள் ...ழுகின்றன. தனிப்பட்டவர் ...ளை பல கவலைகள் சூழ்கின் ...ன; நாடுகளைப் பெரிய கவலை ...ள் சூழ்கின்றன!

...கவலைகள் பலருக்குக் கலக் ...த்தைத் தருகின்றன, அமை ...யற்ற நிலையை உண்டாக்கு ...ன்றன; "என்ன நேருமோ, ...து ஆகுமோ!" என்ற பயம் ...க்கள் மனதில் நெளிகிறது! ...க்களை பயம் சூழ்கிற நேரங்க ...ில், நாட்டுத்தலைவர்கள் அர ...ாங்கப் பொறுப்பில் இருப்ப ...ர்கள் ஊக்கம் தருகின்றனர்!

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ் ...வாரு விதமான கலக்கம் ...ருக்கத்தான் செய்கிறது. ...லகில் மிகப் பெரிய குபேர ...ாட்சம் அமெரிக்காவில், எல் ...ா வகையான வசதிகளும் ...சல்வங்களும் இருந்தும், இன் ...றக்கு உலகில் மற்றெல்லாப் ...குதிகளைவிட அங்குதான் ...லக்கம் அதிகமாக இருக்கி ...து!

...ருஷியாவில் செயற்கைச் சந் ...ரனை அனுப்பியதும், அமெ ...க்கர்கள் மனதில் "அமாவா ...சை" இருட்டைப் போன்று ...ரு கலக்கம் மூளுகிறது! "கவ ...லைப்பட வேண்டாம், நாமும் ...தைப்போன்று விரைவில் ...செயற்கைக் கோளங்களை ...டப் போகிறோம்" என்று ...சனோவர் ஆறுதல் தருகிறார்!

இந்தியாவில் ஐந்தாண்டுத் ...ட்டத்தைப்போட்டு, அதற்கு ...வண்டிய பணத்துக்கு மந்திரி ...ள் ஆளுக்கொரு திசையாக ...ட்சா பாத்திரத்துடன் சென் ...ர்கள்! கிருஷ்ண மேனன் இங் ...லாந்துக்குச் சென்றார், ...நரு பண்டிதர் ஜப்பானுக்குச் ...சன்றார், டி. டி. கிருஷ்ணமாச் ...ாரியார் அமெரிக்கா சென்றார், ...சனோவரையும்அமெரிக்கமுத ...ாளிகளையும் வலம் வந்தார், ...ங்கிருந்து இங்கிலாந்துக்குப் ...றந்தார், பின் ஜெர்மனிக்குச் ...சன்றார்! தட்டை ஏந்தி வெளி ...ாடுகளுக்குச் சென்றவர்கள் ...ட்டை நாமத்துடன் திரும்பி ...ந்தார்கள்! எதிர் பார்த்தபடி ...தி கிடைக்கவில்லையே என்ற ...ம், பொருளாதார நிபுணர் ...ள் கவலைப் பட்டார்கள். மக் ...களுக்குக் கலக்கம் தோன்றி ...து! ஆனால் பிரதம மந்திரி ...ண்டித நேரு அவர்கள் "கவ ...லைப்பட வேண்டாம்!" என்று ...றியுள்ளார்!

அமெரிக்கத் தலைவர் ஐசனோ ...ர் "கவலைப்பட வேண்டாம்" ...ன்று கூறுகிறார். பாரதரத் ...னம் பண்டித நேரு "கவலைப் ...ட வேண்டாம்" என்று கூறு ...றார். அதைப்போல, சென்னை மாநிலத்துக்குக் கிடைத்துள்ள மந்திரி ரத்தினங்களில் ஒருவரான கக்கன் அவர்களும் "கவலைப்பட வேண்டாம்" என்று தெரிவிக்கிறார்!

"பெரியதொரு போர் மூண்டால், தங்களுக்கு என்ன நேரிடும், எதிர்ப்பை எப்படிச் சமாளிப்பது" என்பதில் அமெரிக்க மக்களுக்கு கவலை ஏற்படுகிறது. அந்தக் கவலையைப் போக்க, ஐசனோவர் அப்படிப் பேசுகிறார்!

"ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வேண்டிய நிதி கிடைக்கா விட்டால், ஆகக் கூடிய செலவைச் சரிக்கட்டும் முயற்சியில், பெரியதொரு பொருளாதாரநெருக்கடி மூளுமே! அதை எப்படிச் சமாளிப்பது!" என்பதில் ஏற்படுகிற கலக்கத்தைப் போக்க, பண்டித நேரு "கவலைப்பட வேண்டாம்!" என்று கூறுகிறார்!

அவர்களைப் போலவே, "கவலைப்பட வேண்டாம்" என்று மந்திரி கனம் கக்கன் கூறுகிறாரே, எதைப் பார்த்துக் கலக்கமடைந்து அப்படி அவர் கூறுகிறார்!

கவலைப்படவேண்டாமென்று கூறும்பொழுதே, கவலைப்படத் தக்கது ஒன்று இருப்பது நன்ருகத் தெரிகிறது. கவலைப்படத் தக்கதாக ஏதாவது வந்தால்தான், யாராவது ஒருவர் கவலைப்பட வேண்டாம் என்று கூறுவார்கள்! கவலைப் படவேண்டாம் என்று கக்கன் கூறும்படி என்ன நெருக்கடி நிலைமை வந்து விட்டது?

வலங்கைமான் கூட்டத்தில் கனம் கக்கன் அவர்கள் "திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்" என்று கூறியுள்ளார்! ஆக மந்திரியாரின் கலக்கத்துக்குக் காரணம் தெரிகிறதல்லவா?

திராவிட முன்னேற்றக் கழகம் அப்படியென்ன மாபெரும் ஆபத்துக்களைக் கொண்டு வந்து விட்டதென்றால், கக்கன்ஜி அவர்கள் கூறுகிறார்:

"அடுக்குமொழி பேசுகிறவர்களிடம் தேச பக்தி இல்லை. மனிதனுக்கு அவசியமானது நாட்டுப்பற்று... திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. தி. மு. கழகத்துக்கு தஞ்சை, திருச்சி மாவட்டத்தில்தான் வேலை. வேறு எங்குமே மதிப்பு கிடையாது. தி. மு. கவின் திட்டம் நடை முறைக்கு ஏற்றது இல்லை! ஹரிஜனங்களுக்காக காந்தி படாதபாடு பட்டார். அவர் ஹரிஜனங்களுக்குச் செய்திருக்கும் சேவை போல் யாரும் சேவை செய்ய வில்லை."

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் கூறும் பொழுது ஒன்றோடொன்று தொடர்பு அற்ற கருத்துக்களை அவர் அள்ளித் தெளித்திருக்கிறார்! காரணமில்லாத சில முடிவுகள், பலரும், ஒத்துக் கொண்டுள்ள சில கருத்துக்கள் இவற்றை ஒன்ருகக்கலந்து அவர் தந்திருக்கிறார்.

"அடுக்குமொழி பேசுகிறவர்களிடம் தேச பக்தி இல்லை!"—இது கக்கனுடைய கருத்து.

"மனிதனுக்கு அவசியமானது நாட்டுப்பற்று!"—இது பலரும் ஒத்துக் கொள்ளும் கருத்து!

"திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்!" —இது கக்கன் அவர்களுடைய கருத்து.

"ஹரிஜனங்களுக்காக காந்தி படாத பாடுபட்டார்" இது பலரும் ஒத்துக்கொள்ளும் கருத்து!

இவ்விதம் ஒத்துக் கொள்ளப் பட்ட சில கருத்துக்களிடையில், தமது சொந்தக்கருத்துக்களையும் இன்பச் செருகலாகக் கக்கன் சேர்த்து விடுகிறார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினரிடம் தேசபக்தி இல்லை என்று நேரிடையாகக் கூட அவர் கூருமல், அடுக்கு மொழிக்காரர்கள் என மறைமுகமாகத்தாக்குகிறார்! அறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் சட்டமன்றத்தில் பேசுவதைக் குறிப்பிட்டு, "அழகு தமிழ் சென்னை சட்டசபையில் மிளிர்கிறது" என காங்கிரசுப் பத்திரிக்கைகளும், காங்கிரசுக்காரர்களும் சொல்கிறார்கள்! மற்றவர்கள்- அவர் கட்சியினரே "அழகுத் தமிழ்", என்று குறிப்பிடுவதைத்தான் மந்திரி கக்கன் 'அடுக்கு மொழி' என்று குறிப்பிடுகிறார்! "அழகுதமிழ் என்ருல் அவருக்குத் தெரியாதோ அல்லது புரியாதோ என்னவோ, "அடுக்குமொழி" எனக் கூறி, அதன் தரத்தைக் குறைத்துக் காட்ட முயல்கிறார்.

போகட்டும், அடுக்கு மொழிக்கும், தேச பக்திக்கும் என்ன மாறுபாடு வந்தது என்று தெரியவில்லை, "அடுக்குமொழி பேசுபவர்களிடம் தேச பக்தி இல்லை" என்று அறிவிக்கிறார்!

உண்மையான நாட்டுப்பற்று திராவிட முன்னேற்றக் கழகத்திடம் இருக்கிறது என்று நாம் கூறுகிறோம்.

"தென்னாடு ஒரு தனிப்பட்ட அமைப்பு" என்பதைப் பொருளாதார பேராசிரியர்களிலிருந்து வரலாறு படிக்கும் மாணவன் வரை தெரிவிக்கின்றனர். இத்தகையத் தனிப்பட்ட ஒரு அமைப்பைப் பற்றி யார் அக்கரை காட்டுகிறார்களோ, யார் கவலைப் படுகிறார்களோ, இந்த நாட்டின் அரசியல் உரிமைகளுக்கும் பொருள் வளத்துக்கும் யார் போராடுகிறார்களோ, அவர்கள்தாம் இந்த நாட்டின் உண்மையான தேசியவாதிகள்!

ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டுக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை என்று நாம் கூறும்பொழுது, டில்லி ஆதிக்கத்துக்கு அது துரோகச் செயலாகப் படலாம். ஆனால் தென்னாட்டைப் பொறுத்த வரை அது ஒரு "நாட்டுப்பற்று" ஆகத்தான் இருக்கும்!

தமிழ் நாட்டுக்குத் "தமிழ் நாடு" என்று பெயரிட நாம் வேண்டுகிறோம். காங்கிரசுக் கட்சியும் கக்கன் அவர்களைக் கொண்ட மந்திரி சபையும் மறுக்கின்றன! யாரிடம் நாட்டுப் பற்று இல்லாமலிருக்கிறது? தாயைத் தாய் என்று கூற யார் ஆயாசப்படுகிறார்கள்?

"வட நாட்டு இந்தி ஏகாதிபத்தியத்துக்கு தென்னாடு அடிமைபடக்கூடாது" என எதிர்க்கிறோம். இது எந்த வகையில் நமது நாட்டுக்குத் துரோகம் என்று சொல்ல முடியும்?

கனம் கக்கன் அவர்கள் பேசிய கூட்டத்தில் ஆதித் திராவிடப்பெருங்குடி மக்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து பிரிக்க வேண்டுமென்று, "ஹரி ஜனங்களுக்காகக் காந்தியார் படாத பாடுபட்டார்" என்று சொல்கிறார். அவர் சொல்வதைநாம் மறுக்கவில்லை. அதனால் காந்தியாருக்குப் பெருமை இருக்கிறது; அதனால் இவருக்கு என்ன பெருமை கிடைக்கிறது என்று தெரியவில்லை. காந்தியார் நிழலில் காங்கிரசை வைத்து

(10-ம் பக்கம் பார்க்க)

# அணுவாற்றலின் தோற்றம்

(நாஞ்சில். செ. அன்பெழில்)

**1942 டிசம்பர் 2......**

ஏறத்தாழ அன்று மாலை மணி நாலரை இருக்கும். ஆர்வார்டு பல்கலைக் கழகத்தில் (Harward University) ஏதோ சில பணிகளில் ஈடுபட்டிருந்த டாக்டர் சேம்சு. பீ. கோனண்ட் அவர்களின் தொலை பேசி மணி கணகண வென்று அடித்து முழக்கி அவரை அழைத்தது. சேம்சு. பி. கோனண்ட் அவர்கள் சென்ற உலகப் போரின் போது தேசிய பாதுகாப்பு ஆய்வுக்குழு (National Defense Research Committee) வின் தலைவராக பணியாற்றினார்கள். அமெரிக்காவின் மிகச் சிறந்த விஞ்ஞானிகள். கல்வி விற்பன்னர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்கவர் இவர். தான் செய்து கொண்டிருந்த பணியை அப்படியே விட்டுவிட்டு தொலைபேசி குழாயை கையில் எடுத்த பொழுது தன் மனதிற்கு பெருமகிழ்ச்சியையும், விஞ்ஞான உலகிற்கு ஒரு எழுச்சியையும், மக்கள் மத்தியில் பெரும் புரட்சியையும் ஏற்படுத்துகின்ற ஒரு புதிய ஆற்றல் நிறைந்த செய்தியை அறியப்போகிறோம் என்று அவர் எதிர் பார்க்கவில்லை.

"ஆர்வார்டு பல்கலைக்கழகம் கோனண்ட் பேசுகிறேன். நீங்கள்......"

"வணக்கம், நான் ஆர்தர் காம்டன் சிக்காகோவிலிருந்து பேசுகிறேன்..."

"வணக்கம், வணக்கம். உங்களோடு பேசுவதிலே பெரிதும் மகிழ்கிறேன். டாக்டர். பெர்மியின் முயற்சி எந்த நிலையில் இருக்கிறது?"

"அதை தெரிவிக்கத்தான் வந்தேன். இத்தாலிய மாலுமி ஆய்வுக் கடல் கடந்து புது உலகக் கரை வந்து சேர்ந்து விட்டார்..."

"என்ன, என்ன? புதுயுகம் பிறந்து விட்டதா? என் மகிழ்ச்சியை அவருக்குத் தெரிவியுங்கள். எப்பொழுது கரைசேர்ந்தார்?"

"இன்று மாலை சரியாக மணி 3-25 க்கு புது உலகின் கரை அடைந்தார்."

"பெரிதும் மகிழ்கிறேன். புது உலகத்து மக்கள் எப்படி வரவேற்றார்கள்?"

"மிகத் தோழமையோடு வரவேற்றார்கள். தொண்டு செய்யவும் ஆர்வத்தோடு உள்ளனர்.'

"என் நீண்ட காலக் கனவு நிறைவேறியது குறித்து பெரிதும் மகிழ்கிறேன். தங்கள் செய்திக்கு நன்றி, வணக்கம்!"

"வணக்கம்' கூறி விஞ்ஞானி ஆர்தர் காம்டன் தொலை பேசியைக் கீழே வைத்தார். அவர் முகத்திலே ஒரு ஈடு இணையற்ற பெருமிதம் தாண்டவமாடியது.

அமெரிக்காவில் சிக்காகோ நகரில் அமைந்திருந்த விஞ்ஞான ஆய்வுக்களம் அன்று மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தது. உலகின் பல பாகங்களிலிருந்தும் வாழ்த்துக்களும், பாராட்டுரைகளும் தந்தி மூலமும் தொலை பேசிகள் மூலமும் வந்து குவிந்து கொண்டிருந்தன. சிறிய காகிதக் குவளைகளில் வழங்கப்பட்ட இத்தாலிய சிவப்பு ஒயினை அங்கிருந்தோர் மெல்லச் சுவைத்துப் பருகிக் கொண்டிருந்தனர். அவர்கள் மத்தியில் இத்தாலி நாட்டைச் சேர்ந்த டாக்டர்- என்றிக்கோ பெர்மி என்ற விஞ்ஞானி பெருமிதமும், பெரு மகிழ்ச்சியும் முகத்திலே நிழலாட, புன்னகையும் பூரிப்பும் உதட்டிலே உறவாட வீற்றிருந்தார். அண்டத்தை வென்றது அணு, அந்த அணுவை வென்றோம் நாம்' என்ற ஒரு பெருமைக்குரியஎண்ணம் அவரை மகிழ்ச்சிப் பூங்காவிலே உலவ வைத்தது. உலக விஞ்ஞானிகள் அனைவரும் பூரிப்பும் புளகாங்கிதமும் அடைகின்ற நாள் அன்று, 1942 டிசம்பர் 2.

எவ்வளவோ நேரம் நினைப்பு, அறிவு ஆற்றல், ஓய்வு ஒளிச்சல், பொருள் பொறுமை, அத்தனையையும் தியாகம் செய்த பின்னால், எவ்வளவோ பெரு முயற்சிக்குப் பிறகு அணு உலையை உருவாக்கித் அதை தன் உள்ளத்திலே எழுகின்ற ஆசை அலைகளுக்குக் கட்டுப்படுத்தி, அதிலிருந்து அளவற்ற பேராற்றலை உலகிலேயே முதன் முதல் உண்டாக்கிய பெருமை டாக்டர் பெர்மியுடையது. அந்த பெருமைக்கு உரிய நாள்தான் 1942 டிசம்பர் 2.

இவ்வாராய்ச்சியிலே பெரிதும் ஆர்வமும் அக்கரையும் கொண்டிருந்த டாக்டர். சேம்சு. பி. கோனண்ட் செய்தி அறிந்ததும் மகிழ்ந்தார். இயற்கையை வென்றோம், இனி எதையும் செய்வோம்' என்ற எண்ணத்தில் திளைத்தார். அலாவுதீனின் அற்புத விளக்கிற்குள் ஒளிந்து கொண்டிருந்த பூதத்தைப்போல, பார்வைக்குப் புலனாகாத சின்னஞ்சிறு அணியினுள் பதுங்கிக் கிடக்கும் பேராற்றலை வெளிக் கொணர்ந்த விஞ்ஞானப் பெருந்தகை டாக்டர் பெர்மிக்கு, அமெரிக்க அணுவாற்றல் குழு நவம்பர் 16-ம் நாள் சிறப்புப் பரிசு தந்து பாராட்டியது. 'அணு யுகச் சிற்பி' என்ற புதிய விருதும் அவருக்கு உரியதாயிற்று.

இன்று அவர் இல்லை. காலதேவன் கிளப்பிய மரண வெள்ளப் பெருக்கிலே மறைந்து விட்டார், ஆனால் அவருடைய அறிவாற்றலில் உருவான புதிய பல உண்மைகள் இன்றைய விஞ்ஞானிகளின் முயற்சிக்கு, ஆய்வுப் பணிக்குத் துணை நிற்கின்றன.

"அணுவை வென்றோம், அதிலிருந்து அபரிமிதமான ஆற்றலையும் பெற்றோம். அப்புனிதமான பேராற்றலை உலக அழிவிற்குப் பயன் படுத்தாமல், மனித இனத்தின் நல்வாழ்வுக்குப்பயன் படுத்த முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்." என்று இறப்பதற்கு முன்னால் கூறிச் சென்றார் டாக்டர். பெர்மி.

பல்லாண்டுகட்கு முன்னால் கிரேக்க பேரறிஞன் டெமாக்கிரடசால் பொருள்களின் துண்டிக்க முடியாத மிகச்சிறிய நுண்ணிய பகுதி என்று வரையறுக்கப் பட்ட அணு, விஞ்ஞானி டால்டனின் கொள்கையால் உருப்பெற்று, ஆவகாடரோவின் தத்துவத்தால் வளர்ந்து. ஐன்சுடைனின் கோட்பாட்டால் தன்னுள்ளே இணையற்ற ஆற்றல் ஒன்று ஒளிந்து கிடக்கிறது என்ற உண்மையை விளக்கி, அட்டோ கேன், ஸ்டாஸ்மன், நீல்ஸ்போர் ஆகியோரின் பெரு முயற்சியால் 'பிளக்க முடியாது' என்ற வரையறையைப் பொய்யாக்கி பிளக்கப்பட்டு, பேராற்றலை வெளிக் கொணர்ந்து, டாக்டர் பெர்மியின் சிறந்த ஆராய்ச்சியின் விளைவால் ஆற்றல் கட்டுப் படுத்தப்பட்டு, சப்பானில் தன் அழிவாற்றலை செயலாக்கிய தன் மூலம் மனித இதயங்களில் அச்சத்தை ஏற்படுத்தி, இன்று 'ஆக்க வேலைகளுக்கும் தன் துணை உண்டு' என்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறது. யுரேனிய அணுக்கள் உடைக்கப் படும்பொழுது நியூட்ரன என்ற நுண்ணிய துகள்கள் வெளி வருகின்றன. நியூட்ரனால் தாக்கப்பட்டு மற்ற அணுக்களும் சிதைகின்றன. ஒவ்வொரு சிதைவின் போதும், பேராற்றல் உருவாகிறது. இத் தொடர் வினையின் விளைவால் ஏற்படுகின்ற தாங்க முடியாத வெப்பத்தையும், தடுக்க முடியாத ஆற்றலையும் தேவையுள்ள போது பயன்படுத்திக் கொள்ளவும், தேவையற்ற போது நிறுத்தி வைக்கவும் தகுந்த முறையில் டாக்டர். பெர்மி அவர்கள் தலைமையின் கீழ் உருவான ஒரு அமைப்பே அணு உலை. அழிவின் மூலம் அகிலமெங்கும் அறிமுகப் படுத்தப்பட்ட அணுவாற்றலை ஆக்கவேலைகட்குப் பயன் படுத்த அமைக்கப்பட்ட பெ... தான் அணு உலை.

இந்த அணு உலைகளி... யம் (பாசுபரஸ்) கோ... ஆகிய தனிமங்களை இ... அவற்றிலும் அணுச் சிதை... ஏற்படுத்தி ஆற்றலை வெளி... கொணர முடியும். இவற்... அணுக் கதிரியக்க ஒரு நிலை... தனிமங்கள் (ரேடியோ ஆக்டி... ஐசோடோப்கள்) என்ப... அணுவாற்றலை ஆக்கத் து... களில் பயன் படுத்த இ... வொரு நிலைத் தனிமங்க... சிறந்த கருவிகளாகப் பயன்ப... கின்றன. அறிவியல் மு... னேற்றத்திற்கு உருப்பெரு... காடி (மைக்கிராசுகோப்) எ... அளவிற்கு இன்றியமையா... ஒன்றோ அந்த அளவிற்... இன்றைய விஞ்ஞான வளர்... சிக்கு இந்த ஒரு நிலைத் தனிம... களும் தவிர்க்க முடியாதவை... ளாகத் திகழ்கின்றன. வே... ளாண்மை, மருத்துவம், தொ... ழில் ஆகிய பல வேறு பட்... துறைகளில் அணுக் கதிரிய... ஒரு நிலைத் தனிமங்களின் துணைகொண்டு சிறந்த அள... முனேற்றங்களைக் கொண... வரலாம். அனைத்துலக அணு... வாற்றல் குழு இப்பொழு... உலக நாடுகளின் உறுது... யின் விளைவால் உருவா... வளர்ந்து வருகிறது. அமெ... ரிக்காவும், பிரிட்டனும் அணு... உலைகளை உருவாக்க மூல... பொருள்களைக் கொடுத்து வ... கின்றன. இச்சிறிய அணு உ... களில் கதிரியக்க ஒரு நிலை... தனிமங்கள் உற்பத்தி செய்ய... படுவதோடு அவை அணுவா... றலை ஆக்க வேலைகளில் பய... படுத்துவதற்குரிய வழிவகை... களையும் வகுத்துத் தரு... என்று விஞ்ஞானிகள் எதி... பார்க்கின்றனர்.

இத்தகைய அணு உலை... ளின எழுச்சிக்கு வழி காட்... யாக அமைந்த முதல் அணு... உலை வரலாற்றுச் சிறப்பு வா... ந்தது. எளிமையும் பெரு... மையும் உடைய அந்த அணு... உலையை உருவாக்கியவர் டாக்... டர் பெர்மி அவர்களேயாவார். இந்த அணுஉலையின் அமைப்... புதுமையானது மட்டுமல்ல... எளிமையானதும் கூட. மர... சட்டம் ஒன்றை கீழே வைத்து... அதன் மேல் எழுதுகோல் க... (கிராபைட்) யை பல அடுக்கு... ளாக அடுக்கி வைத்தனர். இந்த எழுதுகோல் கரி அடுக்... களில் ஒன்றுவிட்டு ஒன்றி... இடையே மூலைகளில் யுரே... யம் அல்லது யுரேனியத் தி... ணதையை கட்டி கட்டியா... அடுக்கி வைத்தார்கள். இ... படி அமைக்கப் பட்டிரு... எழுதுகோல்கரி அடுக்குகளி... இடையே ஏற்படுத்தப் பட்... ருந்த துளைகளில் காட்மிய... கம்பிகள் சொருகப் பட்டிரு... தன. நியூட்ரான்களைக் கவர்...

…ளகலாற ஆற்றல் காட்… …திற்கு உண்டு. எனவே …கு தடை இல்லாமல் அணு …வெப்பத்தை வெளியிடும் …டைந்ததும், திடீரென்று …பாராத நிலையில் அணு …வேலை துவங்கி விடாமல் …தற்கு காட்மியக் கம்பிகள் பயன் படுத்தப் படுகின்றன. அணு உலை அடுக்கினுள் நியூட்ரான உற்பத்தி நிகழ்வதைக் கண்டுபிடிப்பதற்குரிய கருவிகளும் அருகிலேயே பொருத்தப் பட்டிருந்தன. எழுதுகோல் கரி அடுக்குகள் ஒவ்வொன்றும் அடுக்க அடுக்க, காட்மியக் கம்பிகள் இடை இடையே கொஞ்சம் கொஞ்சமாக வெளியே இழுக்கப் பட்டன. காட்மியக் கம்பிகள் முழுவதையும் வெளியே இழுத்து விட்டால் உள்ளே நடக்கும் நியூட்ரான் உற்பத்தியின் வேகத்தை அருகில் பொருத்தப் பட்டிருக்கும் கருவி தெற்றென எடுத்துக் காட்டும்.

பெருமளவிற்கு உற்பத்தியாகின்ற நியூட்ரான்கள் இடைவிடாமல் மேலும் மேலும் அணுக்களைத் தாக்கி உடைத்து சிறிதும் தடை படாமல் வெப்பத்தையும் ஆற்றலையும் வெளிக்கொணர வேண்டுமென்பதே இவ்வாராய்ச்சியின் குறிக்கோள். தன் குறிக்கோளின் சிறந்த வெற்றிக்கு அணு உலை எந்த அளவு பெரிதாக அமைக்கப் படவேண்டும் என்பதைத் திட்டப் படுத்துவதற்காகவே டாக்டர் பெர்மி இப் பெருமுயற்சியில் ஈடுபட்டார். அவர் கருத்துக்கும் மேலாக அணு உலை அடுக்கு மிகச் சிறந்த அளவிற்கு விரைவில் உயர்ந்து வளர்ந்தது. டிசம்பர் திங்கள் முதல்நாள் அணு உலையினுள் நியூட்ரான் உற்பத்தி மிக வேகமாகவும், விரைவாகவும நடந்து வருவதாகத் தெரிய வந்தது. அணு உலையினுள் சொருகப் பட்டிருக்கும் காட்மியக் கம்பிகளை வெளியே எடுத்து விட்டால் அணு உலை தானாகவே இயங்கும என்று டாக்டர் பெர்மியும் அவர் கூட்டாளிகளும் உணர்ந்தனர்.

மறு நாள் காலை, கீழ் திசையில் தோன்றி தன் பொற் கரங்களால் உலகுக்குப் பொலிவூட்டிக் கொண்டிருந்த கதிரவன் ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்த பெருமைக் குரியவன் ஆனான். அன்று டிசம்பர் இரண்டு. ஆய்வுக் களத்திலிருந்த கடிகார முட்கள் மணி ஒன்பதே முக்கால் என்பதைக் காட்டிக் கொண்டிருந்தன. டாக்டர் பெர்மி அவர்களின் வேண்டுகோளின்படி அணு உலையினுள்ளே நுழைக்கப்பட்டிருந்த சில காட்மியக்கமபிகள் வெளியே இழுத்து விடப்பட்டன. அணு உலையோடு இணைக்கப் பட்டிருந்த நியூட்ரான்கள் உற்பத்தியைக் காட்டும் கருவியையே அனைவர்விழிகளும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தன. அக்கருவி இருதனிக் கருவிகளின் கூட்டமைப்பு. ஒரு கருவியின முகப்பு கடிகார முகப்பின் அமைப்பை ஒத்தது. கால வேகத்தை ஒலி எழுப்பி ஓட்டிக்காட்டும் கடிகார முள் போலவே, நியூட்ரான் உற்பத்தி வேகத்தை இக் கருவியின் முகப்பில் அமைக்கப் பட்டிருந்த தனிமுள் 'கிளிக், கிளிக்' என்று ஒலித்துக் கொண்டு அசைகின்றதன் மூலம் காட்டும். அதோடு இணைக்கப் பட்டிருக்கும் மற்றொரு கருவியின் ஒரு அங்கமாக பேனா ஒன்று பொருத்தப் பட்டிருக்கிறது. அணு அடுக்கினுள் நிகழும் நியூட்ரான் உற்பத்தி வேகத்தை வரை காகிதத்தில் (Graph Paper) அந்தப் பேனா கோடிட்டுக்காட்டுகிறது. வரைகோடு ஒழுங்காக் உயரே போனால் அது ஒரே வேகத்தில் மிகுதியான அளவு நியூட்ரான் உற்பத்தியாகிறது. என்பதைக் காட்டும். இச் சிதைவு வினை அல்லது நியூட்ரான் உற்பத்தி நிகழ்ச்சி தாங்க முடியாத அளவிற்கு வளர்ந்து விடக் கூடாது என்பதற்காக தடை போடுகின்ற முறையில் இரண்டு காட்மியக் கம்பிகள் இணைக்கப் பட்டிருந்தன. ஆய்வகத்துணையாளர் 'சின்' என்பவர் டாக்டர் பெர்மியின் ஆலோசனைப்படி சரியாக பத்து மணிக்கு ஒரு காட்மியக் கம்பியை வெளியே எடுத்தார். அணு உலை அடுக்கினுள்ளே எவ்வளவு ஆழத்திற்குள் இருக்கிறது என்பதை அறியத் தகுந்த வகையில் வரையிடப் பட்டிருந்த மற்றொரு கம்பியின் அருகே 'ஜார்ஜ் வெய்ல்' என்ற விஞ்ஞானி நின்றார்.

நியூட்ரான் உற்பத்தி வேகத்தை உணர்த்தும் கருவியின் 'கிளிக், கிளிக்' ஒலி மிக வேகமாகக் கேட்டது. காகிதத்தில் வரைவு கோடு உயர்ந்து கொண்டே போனது. ஆனால் விரைவில் ஒலியும் குறைந்தது. வரைவு கோடும் படுக்கைக்கோடாகி விட்டது. இந்த மாறுதல்கள் அணு உலை இன்னும் தானே இயங்கும் ஆற்றலைப் பெறவில்லை என்பதை உணர்த்தின. அதன் பிறகு டாக்டர் பெர்மியின் கட்டளைப்படி ஜார்ஜ் வெயிலின் அருகிலிருந்த காட்மியக் கம்பி கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப் பட்டது. காட்மியக் கம்பி உயர உயர வினையின் வேகமும் ஏறிக் கொண்டிருந்தது. ஆனால் எதிர் பார்த்ததற்கு மாறாக விரைவில் அந்த வேகம் தணிந்து விட்டது. ஆனந்தமும் களிப்பும் சதிராடிய முகங்களில் அலுப்பும் சலிப்பும் சரசமாடின. அதற்குள் பொழுதும் நண்பகலைத் தாண்டிக் கொண்டிருந்தது. சலிப்பு, ஆராய்ச்சியின் மேல் வெறுப்பை வளர்த்து விடக்கூடாது என்று எண்ணிய டாக்டர் பெர்மியாரும் எதிர் பார்க்காத நிலையில் 'பசிக்கிறது, வாருங்கள் சாப்பிடப்போவோம்' என்று அழைத்தார். சாதாரணமாகவே சாப்பாட்டு நேரத்தில் அமைதியாக இருக்கும் அவர் அன்று வழக்கத்திற்கும் மேலாக அதிக அமைதியோடு இருந்தார். அவர் மூளை அணு உலையை வளைய வந்தது. அவர் இதயம் தன் முயற்சி இன்னும் முழு வெற்றி அடையாததை எண்ணி வருந்திக் கொண்டிருந்தது.

மணி இரண்டு அடித்தது. விஞ்ஞானியர் குழாம் ஆய்வுக் களத்தை நோக்கிச் சென்றது. சரியாக மணி 2-20 என்பதை கடிகார முட்கள் தாண்டிக் காட்டின. 'வெய்ல், உம், எடு'' என்றார் டாக்டர் பெர்மி. காட்மியக் கம்பியை ஜார்ஜ் வெய்ல் குறித்த அளவு வெளியே இழுத்தார். டாக்டர் பெர்மி, கருவிகள் காட்டும் குறிப்புகளிலிருந்து நியூட்ரான் உற்பத்தி வேகத்தை கணித்துக் கொண்டிருந்தார். அடுத்து நின்ற அறிவியல் வல்லுநர் அத்தனை பேரும் கருவியையும், கடிகாரத்தையும், டாக்டர் பெர்மியின் கணக்கையும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்தனர். டாக்டர் பெர்மியின் இதழ்களிலே புன்னகை உறவாடியது, முகத்திலே களையும் களிப்பும் நிழலாடின. "இதோ, இதோ இப்பொழுது வெற்றி கிடைக்கும் இனிமேல் அணு உலை தானே இயங்கும். வரைகோடு உயர்ந்து கொண்டு போகுமே ஒழிய இறங்காது." என்று பெரு மகிழ்ச்சியோடு அருகிலிருந்த டாக்டர் ஆர்தர் காம்டனிடம் கூறினார். அவரும் ஆனந்தக் கடலில் நீராடினார்.

குறிப்புகள் எதுவும் தவறிவிடாமல் கருவியிலிருந்து சேகரித்து டாக்டர். பெர்மி மாறி மாறி நியூட்ரான் உற்பத்தி வேகத்தைக்கணித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தவர்கள் ஆர்வமும் ஆசையும் அலைமோத அணு உலைக் கருவியையே உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். புதுயுகத்தின் தோற்றத்தை, புத்துலகப் பிறப்பை ஒரு நொடியும் தவறவிடாமல் காண வேண்டும் என்ற ஆசை அவர்கள் உடலை இயக்கிக் கொண்டிருந்தது. வேகம் காட்டும் கருவிகள் இரையத் துவங்கின. இத்தனைக்கும் மத்தியில் டாக்டர். பெர்மி அமைதியாக கணக்கு போட்டுக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு "இப்பொழுது தானே இயங்குகிறது" என்றார் டாக்டர். பெர்மி. அனைவரும் ஆவலோடு அணு உலையைப் பார்த்து மகிழ்ந்தனர். அப்பொழுது சரியாக மாலை மணி மூன்றேகால். அறிவியல் உலகத்தால் அணுயுகமான புது யுகத் தோற்றம் 1942 டிசம்பர் 2-ம் நாள் மாலை மணி மூன்றேகால் என்று திட்ட வட்டமாக முடிவு செய்யப் பட்டது. ஏறத்தாழ இருபத்தெட்டு நிமிட நேரங்கள் அணு உலை இவ்வாறே இயங்க விடப் பட்டது. பிறகு மீண்டும் காட்மியக் கம்பிகள் அணு உலையினுள்ளே நுழைக்கப் பட்டன. புதுயுகத்தைத் தோற்றுவித்த பூரிப்பில் அனைவரும் தம்மை மறந்தனர்; அறிவியல் ஆற்றலை வியந்தனர். அந்த வெற்றியை கொண்டாடும் வகையில் விஞ்ஞானிகள் அனைவர்க்கும் ஆய்வுக் களத்தில் இத்தாலியச் சிவப்பு ஒயின் சிறிய காகிதக் குவளைகளில் வழங்கப்பட்டது. இவ்வாராய்ச்சி மூலம் "அணுயுகச் சிற்பி" என்ற விருது பெற்ற டாக்டர். பெர்மியும் இத்தாலிய நாட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது. சூழ்ந்திருந்த விஞ்ஞானிகள் அனைவரும் ஒயினை சுவைத்துப் பருகி தங்கள் உற்சாகத்தைத் தெரிவித்தனர். கட்டுரையின் முதற் பாகத்தில் குறிப்பிட்டதுபோல அணுயுகத்தின் தோற்றத்தில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட டாக்டர் சேம்ஸ். பி. கொனண்டுக்கு தொலைபேசி மூலம் செய்தி அறிவிக்கப் பட்டது.

இப்படித் தோற்றுவிக்கப் பட்ட ஆற்றல், அழிவின் எல்லையைத் தொட்டு நின்றதையும் இன்று ஆக்கப் பணிக்குத் தன்னை அர்ப்பணிக்கும் நிலையில் நிறுத்தப் பட்டிருப்பதையும் உலகம் கண்டு வியக்கிறது. 'அணுவாற்றலை மக்கள் இனத்துக்கு நலம் தரும் ஒரு புது யுகத்தின் தோற்றத்திற்குப் பயன் படுத்த வேண்டும்" என்ற டாக்டர் பெர்மியின் ஆவல் நிறை வேறும் நாள் அதிக தொலைவில் இல்லை. வருகின்ற அக்டோபர் திங்கள் வியன்னாவில் கூட விருக்கும் விஞ்ஞானிகள் மாநாடு டாக்டர் பெர்மியின் கனவை நனவாக்க முயலும் என்று நம்புவோமாக!

அணுயுகம் வாழ்க! ஆக்கப் பணி வளர்க! O

## பிறப்பு.

★

2-11-57 சனிக்கிழமையன்று பெரம்பலூர் தோழர் வா. கு. இராமசாமி அவர்களின் துணைவியார் திருமதி. இன்பவல்லி இராமசாமி அவர்கள் ஈன்றெடுத்த ஆண் குழந்தைக்கு "நெடுஞ்செழியன்" என்று பெயரிடப்பட்டது. அதன் நினைவாக 'மன்றம்' இதழ் வளர்ச்சிக்கு அனுப்பப்பட்ட ரூ. 3-0-0 அன்புடன் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

வா. கு. இராமசாமி.

சிறு கதை

# திருமணம்

(நெல்லை அருணன்)

"திருமணம்" அந்தச் சொல் அவன் சிந்தையிலே செந்தேனாக இனித்தது. அந்தச் சொல்லை நினைத்துக்கொள்கின்ற போதெல்லாம் அளப்பரிய கனவுலகிலே அவன் சஞ்சரித்தான். புரியாத இன்பத்தை எண்ணிப் பூரிப்புக் கொண்டான். இதுவரை தான் கண்டு வந்த திருமண நிகழ்ச்சிகளின் சிறப்புக்குரியனவாகவுள்ள ஒவ்வொன்றாய் எண்ணி மகிழலானான். 'கல்யாண ஊர்வலம்' வரும் என்று எங்கோ இருந்து ஒலித்த இசைத் தட்டு அவன் நினைவலைகளில் மீண்டுமொருமேல் காற்றாய் வீசியது. தான் இருக்கும் சிறு வீட்டையும் மறந்து மாளிகை-பெரிய வீதி-கடைத்தெரு- ஊர்ப்புறம்-பூங்கா-படக் காட்சிச்சாலை ஆகியவைகளிலே அவன் கற்பனையின்: உருப்பெற்று உலவினான்.

தன்னையும், தனக்கென மணம் பேசப்படுகிற ஒவ்வொரு பெண்ணையும் உள்ளத்தே கொண்டு சென்றான் "அந்தப் பெண் நல்ல அழகி. நாம் திருமணம் செய்து கொண்டதும் நமது நண்பர்களெல்லாம் நம்மைப் பாராட்டுவார்கள். 'உனக்கேற்ற அழகியைப் பெற்றிருக்கிறாய்! நீ வாழ்க' என்று வாழ்த்துவதாக எண்ணினான். தன் கணவனுக்கு இத்தகைய வாழ்த்துக்களும் வரவேற்புகளும் நிறைந்துகிடைப்பதையும், 'தானந்தக் கிராமத்திலேயே வாழ்ந்திருந்தால் இத்தகைய வரவேற்பைப் பெற முடியுமா? யாரோ ஒருவனை - அதுவும் கிராம வாசியை வரித்து அவனுடன் இல்லற வாழ்க்கையை மட்டுந்தானே ஏற்றிருக்கமுடியும், இன்பத்துடன் புகழும் கிடைக்க முடியுமா' என எண்ணி அவள் மகிழ்வுற்று அதன் பயனால் நாணமுற்றுத் தன்னையொருமுறையும், தண்ணிலவு திகழும் வானை ஒருமுறையும்-தங்களது இன்பத்தின் விளைநிலமாக விளங்கும் தனியறையை ஒரு முறையும் பார்த்துத்தலை கவிழ்ந்துநாணி நிற்பதாக எண்ணி அவள் கவிழ்ந்ததலை நிமிர்ந்திப் பேசுவதாக எண்ணாமிட்டான்.

"கண்ணே! என் இன்பமே! எனக்கு வாய்த்த இல்வாழ்வின் நல்ல துணையே! இனி நாம் செல்ல வேண்டிய பெரும் பயணத்தின் வழி வகைகளையெல்லாம் உனக்கு இன்றே சொல்லி மகிழ்விக்கிறேன்- அதிலே உனக்குள்ள பங்கு எவ்வளவு எத்தகையது என்பதைத் தெரிவிக்கிறேன். அதிலே நம்மை எதிர்ப்படுகின்றவற்றின் தன்மை வன்மைகளை உனக்கு அறிவிக்கிறே"னென்று பேச்சைத் தொடங்கலானான். பேசாது மௌனமாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பதாகக் கருதிப் பேசிக்கொண்டே போனான். "வாழ்க்கையின் கடமை இன்பம் மட்டுமல்ல! இன்னலை எதிர் நோக்கி இருப்பதுமாகும்! அதிலும் நான் லட்சிய வாழ்வு வாழ விரும்புபவன். என் லட்சியங்கள் சிதைவு படாமல் காக்கத் துணை புரிய வேண்டியது உன் கடமையாகும்"

"நீ பல்வேறுபட்ட மக்களின் வாழ்க்கைத் தன்மையைக் கண்டிருக்கக்கூடும். அவைபோல நம் வாழ்வும் அமைய வேண்டுமென்று ஆசைப்பட்டிருக்கவும் கூடும். ஆனால் அந்த ஆசை என் லட்சியங்களைக் கடவாதவைகளாக இருந்தால் உன் விருப்பமும் கலந்து நிறைவேற்றப் படுவதாக நீ மகிழலாம். இல்லையெனில் என் பொருட்டு உன் எண்ணங்களை மாற்றிப் புது வழியில் திருப்பிக்கொள்ளவேண்டியதுதான். 'கணவனின் கடமை, மனைவியின் எண்ணத்தையும் ஈடேற்றி வைப்பது தானே' என்று நீ கேட்க முற்படலாம்! அந்த உண்மையையும் நான் மறுக்கவில்லை! ஆனால் நீயும் நானும் கலந்து கொள்வதற்கு முன்பாகவே, அவரவருள்ளே ஏற்பட்டு விட்ட எண்ணக் குவியல்கள் அவைகள். ஆனால் தற்போது 'கணவன்' என்ற ஒருவனாலேயே நீ உன் கடந்த காலங்களையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமானால் காலி மனையைக் கண்டவர் பலரும் ஒவ்வொருவருடைய கருத்துக்குத் தக்கவாறு அதிலொரு மாளிகையைக் கற்பனையாக அமைத்துக் களித்திருப்பர். எனினும் அதையொருவன் விலைக்கு வாங்கி விட்ட பின்னர், தன் கருத்துக்கும் - தனக்குக் கிடைத்த வீடு கட்டும் தொழிலாளியின் கற்பனைத் திறத்தின் படிக்கும் தானே கட்டிடத்தின் உருவமைத்துக் காண முடியும். அதே போலத்தான் நாமும். இதை ஏன் இப்போதே நான் கூறிக்கொள்கிறேனென்றால், வாழ்க்கையைத்தொடங்கி விட்ட பின் என் போக்கும் உன் போக்கும் வேறு வேறாக இருக்குமேயானால் இன்பத்திற்குப் பதில் துன்பத்தைத் தான் ஏற்க நேரிடும் என்பதற்காக. இந்த நிலை ஏற்படாமலிருப்பதற்காகத் தான் 'காதல்' மணமும் வேண்டுமென்கிறார்கள். ஏனோ காதல் மணம் செய்து கொள்வதென்பது மிக எளிதான ஒரு காரியமாக நான் கருதவில்லை. காதல் கை கூடுவதன் முன் சமுதாயத்தின் கடுந்தாக்குதலுக்கும்-கொடும் பிடிக்கும் அகப்பட்டு மணத்தின் போது மரணத்திற்கு ஆட்பட்டவர்களின் பட்டியலையே நான் அதிகம் பார்க்கிறேன். ஆகவே மணம் செய்து கொண்டவளிடம் காதலை வளர்த்துக் கொள்வதே தகும் என்ற முறையில் தான் உன்னிடம் இப்போதே கூறிக்கொள்கிறேன்."

என்று தன் கருத்தை வெளியிட்டு அவள் ஒப்புதலைப் பெற்றுவிட்டதாகக் கற்பனை செய்துகொண்டான். இவ்விதம் மணப்பெண் பேச முற்பட்ட நாள்முதல் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தன் கருத்தை வளர்த்துக்கொண்டான். அத்துடன் வாழ்க்கையென்றால் இப்படியிருக்கவேண்டும். இன்னவிதமாக அமைய வேண்டுமென்றும் தான் அதனைச் செயலாற்றிக் காட்டப் போவதாகவும் தன் நண்பர்களிடையே கூறி மகிழ்ந்து வந்தான். உண்மையில் அவனுக்குத் திருமணப் 'பைத்தியம்' பிடித்துவிட்டதோ என்று பலரும் அய்யுறத்தகுந்த அளவு அவன் நடைமுறைகள் இருந்து வந்தது. அத்தகைய மனமாற்றங்களும் பேச்சின் போக்குகளும் தன்மைகளும் அமைந்திருந்தது. இவைகளே பிறரை அவன்வரையில் அவ்வாறு எண்ணச்செய்தது.

இவ்வாறு பலரால் பலவிதம் கருதப்படும் அவன் தன்வாழ்க்கையின் அமைப்பைப்பற்றி ஒரு சிறிதும் எண்ணமிடாமல் திருமணத்தின் நிகழ்ச்சிகளிலேயே கவனம் செலுத்தியிருந்தான். அவன் ஒரு புரிந்து கொள்ளமுடியாத புதிராக இருந்தான். ஏழைதானென்பது அவனது நடைமுறைகள் ஒவ்வொன்றிலும் தெளிவாக வெளிப்பாயிற்று. எனினும் வறுமையில் செம்மையென்பது போல, பகட்டாடையும் படாடோபமும் இல்லையாயினும் பார்ப்பவர் தன்னை ஏழ்மைநிலையிலேயிருப்பவனென்று ஊகித்துக்கொள்ள இயலாவாறு உயர்வு தோன்ற உடுப்பதும்-

மிடுக்காக நடப்பதும்-
போக்கும் கொண்டவந்
திருந்தாலும் ஒருவேளை
வுக்குக்கூட வகைகெட்டு
முறை - பலநாட்கள்
நேரிட்டபோதும் பார்
அவ்வாறு நினைக்க இ
அள்வில் எப்போதும்
முகமும் சிவக்கச்சிவக்க
றிலை மெல்லுகின்ற வ
உடையவனாக இருப்ப
அது அவன் பழக்கம்.
றத்தால் உண்மையை வெ
தெரியவொட்டாமல் மறை
விடலாமென்பது அவன்
துவம். அதை முழுமூச்சு
நிறைவேற்றிவந்தான்.
துடன் அவன் லட்சிய
ளென்று அவன் செய்து
முடிவுகளெல்லாம் அவ
விடாது கூறப்பட்டு வந்
தவிர அவற்றுள் ஒன்றே
நிறைவேறியதாகவோ—நி
வேறப்போவதாகவோ ஒரு
சாயல்கூடத் தென்படவில்

ஒருசமயம் எழுத்தாள
தோற்றமளிப்பான். மறுசம
பாடகனாகவும் பாடலாசிரிய
வும் மாறுவான் - நடிகனா
பான்- அதுவே தன் ஒ
ஆசை-அதைப்பெறவே
தனை காலமும் ஓடியாடித்
துழன்று கொண்டிருக்கி
னென உரைப்பான். இ
யெல்லாம் ஓரளவு உண்மை
கூட. ஆனால் இவைகள் அ
விருப்பிய பலனை எப்போ
அளிக்குமென்பதை அ
லும் கூற முடிவதில்லை, அ
தவர் அறிந்து கொள்ளவு
இயலுவதில்லை! தன் லட்சி
நடிப்பது என்பதைத் தா
விடாப் பிடியாகக் கொண்டி
தான். இவற்றால் அவ
டைந்த பலன் ஒரு வே
சோற்றுக்குத் திண்டாடுவ
அடுத்தவரிடம் தன் நிலை
உண்மையைக் கூறத்தய
வேதனையால் வாடித் த
ததுமேயாகும்.

நடிப்பின் சிறப்பெல்லை
சென்றடைந்து விடலாமெ
பதிலே அகலாப் பற்றுத
அசைக்க முடியாத நம்பிக்
யும் கொண்டவனாகஇருந்தா
அந்த ஒரே காரணத்தால்
வத்தின் படிகளை யெல்ல
கடந்து வந்து விட்டான். மு
மையின் சாயல் முகத்தி
மட்டு மல்ல முயற்சியிலும் ப
ஆரம்பித்து விட்டது. என
லும் தளர்ச்சி கொள்ளா
முயற்சி செய்து கொண்
யிருந்தான். என்றேனும் ஒ
நாள் நிச்சயம் வெற்
கிடைக்கு மென்பது அவ
எண்ணம்.

இத்தகைய நிலையில் அ
திருமணம் செய்து கொ
முடிவு செய்திருந்த தன்
ஆண்டிகள் கூடி மடங்க
வது அல்ல அல்ல-பிற
குருடன் உலகைப்பற்
கனவு காண்பதை ஒக்கு
ஆண்டிகள் கூடி மடங்க
வதென்றால் ஒவ்வொரு ஆ
டியும் மடத்தின் ஏதாவதொ
பகுதியைப் பற்றிச் சி

...மாவது பிரலாபித்துக் ...ண்டிருப்பான். அது ...திர்ந்தாது. ஏனெனில் ...ை திருமணம் பற்றி இவ...் தவிர வேறு யாரும் ...க்கொண்டது கிடையாது. ...ே தான் குருடன் கண்ட ...போல் அவன் நினைத்துக் ...ண்டது தானே உலகம். ...கம் அவன் உணர்ச்சியைத் ...தொட்ட பொருள்களைப்போல் ...ிருக்கும் என்ற அளவு தானே ...விலும் காணமுடியும். அது ...போலவே திருமணத்தை இப்...டி இப்படி ஏற்பாடு செய்ய வேண்டும், இன்னின்ன நிகழ்ச்...சிகள் இவ்வாறு அமையும் என்று கற்பனை செய்து கொண்...டான். பொருளோ ஒரு சிறி...தும் கிடையாது-வருவாய்க்...குரிய ஆதாரமோ அறி...ந்றியோ இல்லை-அவ்வாறிருந்...தும் 'அதை அவ்வாறு ...டித்து இதை இப்படி ஏற்...பாடு செய்து - இதனை இந்த ...விதமாக நிறைவேற்றி விட வேண்டும்!' என்று யூகத்தி...லேயே வைத்துக் கொண்...டான்.

இன்னவர் எனக்கு மிக வேண்டியவர் - அவரைக் ...காண்டு பந்தலை இப்படிப் போட வேண்டுமென்று தொடங்கி அவரைப் பற்றிய பெருமைகளையும் சிறிது நேரம் பேசியிருந்து விட்டுப் பந்தலைப் பற்றிய பிரச்சினை தீர்ந்துவிட்டதாக முடிவு செய்து விடுவான். அடுத்தபடியாக என்ன விளக்...லங்காரம்-ஒலி பெருக்கி வகை...ள். இவ்வளவு தானே அடே...ப்பா எத்தனையோ கம்...பெனிக்காரர்கள் மிக வேண்டியவர்கள். அவர்களெல்லாம் எனக்கு உதவ ஒரு சந்தர்ப்பம் வேண்டுமென்று எதிர் பார்த்திருக்கிறார்கள். என்று கூறுவதுடனேயே அதுவும் நிறைவேறி விட்டதாக முடிவு செய்து கொள்வான்.

பிறகென்ன துணி-நகை வகைகள். இதுவா பிரமாதம், ஒரு நாள் அந்த நண்பர் கூறுனர்- "உங்கள் திருமணத்திற்குவேண்டிய ஆடையணிக அனைத்தும் என் பொறுப்பு" என்று இதுதானே தருமணம். நானென்ன இரண்டு மூன்று திருமணமா செய்து கொள்ளப் போகிறேன். ஒருகால் அடுத்த திருமணத்திற்கு ஆகட்டும் மென்று கூறி விடுவார் என்று நினைக்க. ஆகவே அது பற்றிய கவலையே தேவையில்லை, எனக் கூறி அவரது குண நலன்களைப் பற்றியும், மனவளம் பற்றியும் வாயாறப் புகழ்ந்து பேசி விடுவான்.

இன்னுமென்ன பாக்கியிருக்கிறது. இசை யரங்கமா? இவரைவிடச் சிறந்த பாடகர் வேறு யாருங் கிடையாது, அவரோ எனக்கு உயிர் நண்பர். அதை விட வேறொருவர் பாடுவது என் சிந்தைக்கு இனிக்காது. அவரும் என் வரையில் மறுப்பே கூற முடியாது. எனவே திருமணம் பொலிவும் சிறப்பும் பொருந்த நடந்தேறி விடும். திருமண நிகழ்ச்சிகளுக்கு இயல்பாகவே இவ்விவர்கள் வாக்குறுதியளித்திருக்கிறார்கள். பின்னர் நானேன் கவலை கொள்ள வேண்டும். என இவ்வாறு எல்லாவற்றிற்கும் ஆதாரம் கிடைத்து விட்டதாகவும் அடுத்து திருமணம் நடைபெற வேண்டியதொன்று தான் மீதி என்கின்ற அளவிலும் இருந்து வந்தான்.

இந்த நிலையிலே தான் அவன் திருமணத்தைப் பற்றியும் - தனக்கு வாய்க்கப் போகின்ற மனைவி பற்றியும், அவள் மூலம் கிடைக்கின்ற வாழ்க்கை இன்பம் பற்றியும் அதன் பிறகு நிறை வேறப் போகின்ற இலட்சியம் பற்றியும் எண்ணமிட்டு மகிழ்ந்த வண்ண மிருந்தான். அத்துடன் அமைந்து விடவில்லை; கற்பனையை வளர்த்துக் கொள்வதிலேயும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தான்.

இவ்விதம் சொல்லிலே சுவர்க்கமும்-நினைப்பிலே நிம்மதியும் கண்டு வந்த அவனுக்குரிய மணைப் பெண்ணைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து கிடைக்கப் பெற்ற செய்திகளெல்லாம். அவன் மணமகனாக வாழுவதற்குரிய எந்தச் சாயலையும் ஏற்படுத்தித் தரவில்லை. மாறாக இனி அவன் வாழத் தகுதியில்லை என்பதைக் கூறுது கூறுவதாகவும் அமைந்தது. ஒரு இடத்திலே "இவன் வயோதிகன போன்று தோற்றமளிக்கிறானே! ஒரு வேளை இரண்டாந்தார மணத்திற்கு ஏற்பாடு செய்கிறீர்களோ!" என்று கேட்டனர். மற்றும் சில இடங்களில் "அவனிடம் என்ன சொத்து சுதந்திரம் இருக்கிறது? எதை நம்பி பெண் கொடுப்பது என்பாரும்; அவன் ஆள் ஒரு மாதிரியாமே! போக்கிரியென்று பலர் கூறுகின்றனர்-வம்புத்தனமும் வல்லடி வழக்குகளும அதிகம் கொண்டவனும், அவனுக்குப் பெண் கொடுப்பதை விட ஆறு குளம் கடல் பார்த்துப் பலி கொடுக்கலாமே" என்று தெரிவிப்போருமாகவே இருந்தனர்.

இவற்றைக் கேட்கக் கேட்கத் திருமணத்திலே வெறுப்பும; பழமையைச் சுட்டிக் காட்டித் தன்னைப் பழித்துப் பேசுகின்ற தன்மையை நினைக்க நினைக்க வேதனையின் வசமுமானான் வெறுப்பே உருவானான்.

ஒருநாள் எதிர்பாராவிதமாக தன நண்பர் ஒருவருடன் மருத்துவர் வீட்டுக்குச் சென்றிருந்த அவன், அங்கு கண்ட காட்சியொன்றை மனதிலே கொண்டு திகழலானான். அது மட்டு மல்ல; நடைபெற்றவைகளைப் பெருக்கி - கற்பனைப் படுத்தி - உருவமாகக் காணுகின்றபோது கடந்த காலங்களில் ஊரார் சொன்ன சொற்களும்-கூறிய அழிம்புகளுக்கும்-சுமத்திய பழியுரைகளுக்கும் பரிகாரம் கிடைத்து விட்டதென எண்ணி பரவசப்பட்டான்.

அன்று நடைபெற்றது; அவள் நின்ற திக்கை நோக்கிய போது வைத்த கண் வாங்காமல் தன்னையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருக்கும் இரு விழிகளைச் சந்தித்தன இவனது இரு விழிகளும். சுழல் விளக்குப்போல சுற்றுமுற்றும் பார்வையைத் திருப்பி அடிக்கடி அவள் நிற்கும் திசைக்குத் தன பார்வையை அனுப்பினான். அப்போது விளக்கொளிக்கு இலக்காகி நிற்கும் படிகச் சிலை போன்று அவள் அங்கே நின்று கொண்டிருக்கக் கண்டான். தன்னை மறந்தவனாய் புன்னகை செய்தான். எதிர்பாரா விதமாக அவள் முகத்திலிருந்தும் புன்னகை எதிரொளித்தது. அதே சமயம் முன்னர் பலரால் கூறப்பட்ட அர்ச்சனை மொழிகளும் காதிலே எதிரொலித்தன. மெள்ள மெள்ள தன் விருப்பத்தை இயன்ற வரையில் சைகையின் மூலம் தெரிவித்தான். அவளும் தனது உடன்பாட்டை வெளியிட்டுக் கொண்டிருந்தாள். மருந்தும் விருந்தும் மூன்று நாட்கள் என்பார்கள்-மருத்துவர் வீடு மூன்று மணி நேரம் கூட அங்கே இருக்க வைக்க வில்லை! உள்ளே மருத்துவத்துக்குச் சென்றிருந்த நண்பன் திரும்பி விடவே-தன கண்கள் காணும் விருந்துக்கு முக்காற்புள்ளி வைத்து விட்டுப் புறப்பட்டான். கண்ணுக்கு மறையும் வரை அவளிருந்த திக்கை நோக்கினான்-அவளும் நோக்கியவாறே இருந்தாள். பக்கத்தில் வந்த அவன் நண்பன்-"என்னப்பா பறிகொடுத்த தன் மாதிரி திரும்பித் திரும்பிப் பார்க்கிறாய்" என்றதைக் கவனிக்காமல் "ஆமா-ஆமா" என்று பதில் தெரிவித்த வண்ணம் நடந்தான்.

இத்தகைய நினைவுகளுக்குத் தன்னை ஆட்படுத்தி மகிழ்ந்திருக்கின்ற சமயம் அவன் நண்பன் அவனிடம் கூறிய செய்தி உள்ளத்தே பெரும்புயலாய் உருவெடுத்தது. "அந்த டாக்டர் வீட்டின் எதிர் வீட்டில் ஒரு பெண்ணிருக்கிறாள். நல்ல எழில்-தகுந்த பருவம்-வயதுக்கேற்ற அங்க அமைப்புகளும் அவற்றிலே அழகு தேங்கி நிற்கும் தன்மையும் கொண்டவள்."

என்றெல்லாம் கூறிக் கொண்டு வருகின்றபோது-தான் கண்டு களித்து வந்த காரிகையைப் பற்றிய செய்தியை அறிவிக்கிறான் என்று பெருமகிழ்ச்சி கொண்டாலும்; இவற்றை அவன் கூறுவதிலிருந்து, அவனும் தான்கண்ட அந்தப் பெண் மீது நாட்டம் வைத்திருப்பானோ என்று ஐயுற்றான். "அய்யோ! திருமணத்திற்குப் பெண் பார்க்கச் சென்ற இடங்களில் தான், இல்லையென்பதற்குப் பதிலாக ஏச்சும பேச்சும், இல்லாமையும் பொல்லாமையும் பரப்பட்டதென்றால், இங்கு-காதலிக்கத் தொடங்குகின்ற காலத்திலேயே கருத்தொருமித்த நட்பினுக்கு எதிராகவா நேரவேண்டும்" என, கலங்கிய மனத்தவனாய் நண்பன் கூறுகின்றவற்றை ஒப்புக்கு "உம்" கூட்டிக் கேட்டு வந்தான்.

ஆனால் அவன் இகைப்பும் இகிலும் மேற்பட, அதுவரை அவன் கொண்டிருந்த முடி...

## திராவிடா!

(ரவி)

நிலையிழந்து நேர்மையற்ற நீசன்போல் உன்னுடைத்
தலைகவிழ நிற்பதேனோ தரணிவெற்றி திரவிடா!
புலைவாழ்வு கொண்டமக்கள் புவியிதிலே வாழ்ந்திடக்
கலைவாழ்வு கொண்டநீயும் கவன்றுதினம் தாழ்தலேன்?

திடமுடைய மனமுடையத் திரவிடத்தின் வீரனே!
கடலைவென்றி கொண்டதாயின் காதலுள மக்களே!
இடருற்ற காலத்தும் இன்தாயின் புன்னகை
கடையிதழில் கூடிநின்று உணர்வையூட்டும் உண்மையே!

வீரிட்டுக் கொல்லவரும் வலிமைமிக்க யானையை
மாரினிலே புதைத்ததொரு மரணந்தரும் வேலதால்
வீறுடனே வீழ்த்திவிட்ட வீரமிக்க மறவரின்
சீரியநல் வாழ்வினையே சிந்தையின்று மறந்ததோ?

தரணியாண்ட திரவிடராம் தகமைமிக்க பெயரினை
உருவாய உலகமெங்கும் உண்மையெனப் பரப்பிடத்
திருகனியு: உன்னுள்ளத் தீரமெங்கும் பொலியவே
பெருமிதமாய் பூமியிலே தலைநிமிர்வாய் திராவிடா!

வுக்கு மாறாக நண்பன் கூறிய ஒரு உண்மை அவன் சிந்தையைச் சிதறடித்தது. அவள் அழகையும் - இளமையையும் புகழ்ந்து கொண்டு வந்த அவன் பரிதாபம் தோன்ற "பாவம், எத்தனையிருந்தும் 'பைத்தியம்'- அவளை எண்ணும்போது இரக்கத்தான் வேண்டியிருக்கிறது" என்று கூறி முடித்தான்.

"பைத்தியம் - அவளுக்கா! ஒருபோதும் இருக்காது! பார்வையிலே மாறாத ஒருயிப்பு—தான்காட்டுகின்ற ஜாடைகளை உணர்ந்து அவள் பதிலளித்த தன்மை-நான் அகன்று வந்த பின்னும் என்னை அகலாது தொடர்ந்து வந்த பார்வை இவை பைத்தியத்தினிடம் எதிர்பார்க்க இயலுமா?"

"இனிருக்காது! பைத்தியம் நாம் செய்வது போலவே செய்யும்-நம்மை விடாது முறைத்துப் பார்க்கும்-சிரித்தால் சிரிக்கும் இவள் செயலும் அப்படித்தான் இருக்குமோ"

இவ்வாறு சந்தேகம் எழுந்தது. ஆனால் அவன் அவள்பால் கொண்டிருந்த ஒருவிதப் பற்றின்காரணத்தால் அவளைப் பைத்தியமென்று முடிவுக்குட்படுத்த அவன் மனம் மறுத்தது. அவளிடம் கண்ட காட்சிகளெல்லாம், காதலின் விளைவே என்று கருதினான். எனவே மீண்டும் அவளைச் சென்று காணவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டான். மறுநாள் தன் நண்பன் அழைக்கு முன்பே அவனை வலியச் சென்று அழைத்துக்கொண்டு மருத்துவர் வீட்டுக்குச் சென்றான். அவன் செயலுக்கு ஏதேனுமொரு காரணம் இருக்குமென்று கருதாத அவன் நண்பனும் அவனுக்குத் தன் நலத்திலே நாட்டமிருப்பதாக எண்ணி அவனுடன் மருத்துவர் வீட்டை நாடிச் சென்றான்.

ஆனால் அவன் மருத்துவர் வீட்டைச் சென்றடைந்த நேரம் தொடங்கி வெளியில் வந்து நின்றிருந்தான் முதல் நாள் பார்த்த காரிகையை எதிர்பார்த்து வெளியில் வந்து பார்த்தான். அவன் வருவதை முன்பே அறிந்திருந்தவள் போல அவளும் அங்கே தோற்றமளித்தாள். முதல் நாளைவிட அன்று அவளது தோற்றத்தில் சோகம் தவழ்ந்தது. வாட்டத்துடன் காணப்பெற்றாள். காற்றிலே பறந்து நெற்றியிலே வந்து ஊசலாடும் சுருள் முடி-மழையின்காரணமாகத் தேங்கியிருக்கும் சிறுநீர்த்தேக்கத்திலே கையினால் சிறுவர்கள் அளைந்தாடுதல்போலும் அவள் நெற்றியிலே அசைந்தாடிக் கொண்டிருந்தது. தூசுபடிந்த ஓவியம் போல் முகத்திலே பொலிவு காணப் பட்டாலும் மலர்ச்சியின்றியிருந்தாள். அவளைக் காண்போரெவரும் இளமையின் நிறைவையும்-அத்துடன் எடுத்துக் கூற வியலாத அளவு நிறைந்திருந்த வாட்டத்தின் தன்மையையும் கண்டுகொள்ளத் தக்கதாய் அமைய-பற்றிப் படர ஒரு கொழுகொம்பில்லாப் பைங்கொடி நான்' என்று கூறுமல் கூறுவாளாய் அந்த நீள்மாடத்தின் தூணைப் புறம்பாகத் தழுவிய வண்ணம் நின்றிருந்தாள். அவனைக்கண்டதும், தன் நண்பன் முதல் நாள் கூறிய செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தையும் தீர்த்துக்கொள்ளும் வகையில் நன்றாகச் சிந்தித்து, அவள் பைத்தியமல்ல என்ற முடிவுக்கு வந்தான். அதன் பின்னர் எப்படியும் அவளை அணுகி, தன் உள்ளத்தை வெளியிட்டுவிட வேண்டுமென்ற ஆவலைக் கொண்டவனானான். அடுத்து அதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டான்.

உள்ளிருந்து வந்த ஒரு பெரியவர், அவன் நிற்பதையே ஊன்றிப் பார்த்த வண்ணம் நின்றார். இந்த சமயத்தில் மருத்துவர் வீட்டினுள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்த ஆர்மோனியச் சத்தத்திலே ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக, வெளியே வந்த பெரியவரைப் பார்த்து அவர் அந்த வீட்டிற்குரியவரென்ற எண்ணத்தின் பேரில், அவர் தன்னைப் பார்க்கின்ற தருணத்தில் "அந்த ஆர்மோனியத்தை நிறுத்தச் சொல்லக் கூடாதா? வருகிற நோயாளிகள் அந்த ஒலியைக் கேட்டாலே அதிக நோயுள்ளவர்களாய் ஆகிவிடுவார்களே" என்றான். அதற்கு அவர் "அப்படித்தான் தம்பி நானும் நினைக்கிறேன். இங்குள்ள ஆர்மோனிய ஒலி மற்றவர்களுக்கு நோயை உண்டாக்கும் என்று நீ கூறுகிறாய்-என் வீட்டில் இப்படி கன்னா பின்னா என்று வாசிப்பதிலேயே நோயில் சிறிது மாற்றம் ஏற்படுகிறது" என்று, தன் வீடாகிய எதிர் வீட்டைச் சுட்டிக் காட்டிப் பேசினார். அவர் குறித்தது தன் கவனத்தை இழுத்திருந்த எதிர் வீடாக இருப்பதை அறிந்ததும்-அவர் நோயாளியென்று குறிப்பிடுவது அந்தப் பெண்ணைத் தானோ என்ற சந்தேகம் ஏற்படவும் அவரது வாய் மொழியைக் கொண்டே அவர் வீட்டையடைய முயன்றான். அந்த நோக்கத்துடனேயே பேச்சையும் தொடங்கினான்.

"அப்படியிருக்கின்ற நோயைப் போக்கி விட முடியும் -ஆனால் இது போன்ற செயலால் ஏற்படுகின்ற நோயைப் போக்க வழி கிடையாது."

"எப்படிப் போக்க முடியும். போக்குவதாக இருந்தால் இதுவரையில் நான் செய்துள்ள முயற்சிகளை விட இதுவா பிரமாதம் தம்பி உனக்கந்த மருத்துவ முறை தெரிந்திருந்தால் தாயற்ற குழந்தையான அவள் உடலை-வாழ்வை நலப்படுத்துகின்ற பெரும் புண்ணியம் உனக்குக் கிடைக்கட்டும்" என்றார்.

புண்ணியத்தையோ பாவத்தையோ அவன் எதிர்பார்க்கவில்லை! சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியும் சூழலை நன்கறிந்து கொள்ளவும் முயற்சி செய்தான். மருத்துவர் வீட்டினுள்ளிருந்து வெளிவரும் தன் நண்பன் தன்னைப் பற்றிய தவறான முடிவுக்கு வந்து விடாதிருக்க வேண்டும் என்றும்-கடைசியாக அவளிடம் நாளை, தான் அங்கு வருவதாகத் தெரிவித்து அவள் விருப்பத்தை அறிந்து கொள்ளவும் விரும்பினான். எனவே முதியவரிடம் காலையில் வருவதாகக் கூறியனுப்பி விட்டு-தவறாமல் மறு நாள் காலையில் சென்று நோயாளியைச் சந்தித்து நோய் நீங்கவும் வழி செய்தான்.

அவள் பைத்தியக்காரியல்ல! என்றாலும் பைத்தியம் என்ற சொல்லுக்கே இந்த உலகம் அதிக மதிப்பும்-மரியாதையும்-அச்சமும் வைத்திருக்கிறது என்கின்ற காரணத்தால் தான் பைத்தியமாக மாறினாள். இதை அவன் உடனே உணர்ந்து கொள்ள முடியவில்லை! பெரியவரிடம் கூறியபடி வீட்டிற்குச் சென்று நோயைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொண்ட பிறகு அவனே நேராக அந்த முதியவரைக் கேட்டான் அந்தப் பெண்ணை மணந்துகொள்ள யார் முன் வரப் போகிறார்கள் என்றெண்ணிக் கொண்டிருந்த அவர், உடனே மறுக்காமல் ஒப்புதலளித்து விட்டார்! அவனும் தன் எதிர்காலக் கனவுகளை விளக்கிக் கூறியபோது அவருடைய நம்பிக்கையும் வலுத்தது. ஆகவே அவளைச் சென்று அடிக்கடி சந்திக்க வாய்ப்புகள் ஏற்பட்டன!

அப்போது சந்தர்ப்பத்தின் காரணத்தால் "நீ ஏன் பைத்தியம் போன்றிருந்தாய்" எனறு கேட்டான். "என்னைப் பைத்தியமாகச் செய்தவர் மிகக்களிப்புடன் வாழுகிறார். நான் ஒருவரைக் காதலித்தேன் எல்லாப் பெண்களையும் போல நம்பிக்கையினாலேயே அவரது செயல்களில் ஆழ்ந்த கவனம் செலுத்தாமலிருந்தேன். ஆனால் இறுதியில் நான் பெற்ற கைமாறு ஏமாற்றந்தான். வேறொருத்தியை மணம் செய்து கொண்டாரவர்.

"பெண்ணினம் ஒரு பெண்ணின் தன்மையைக் கண்டோ-கேட்டறிந்தோ செயலாற்றுகிற தன்மை இன்னும் உருவாகவில்லையே! தன் வகையில் பங்கம் நேர்ந்து விடுமோ-குறை நேர்ந்து விடுமோ - வருவது கெடுமோ என்று தானே கருதுகின்றார்கள். ஆகவே! என் மனம் வேறொருவரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்கின்ற நினைவைக் கொள்ளுகின்ற போதெல்லாம் எல்லோரும் ஏமாற்றுக்காரர்களாகத்தான் இருப்பார்கள் என்ற நினைவைத்தான் ஏற்படுத்து[illegible]தாயிருந்தது. மேலும் அடுத்துத் திருமண ஏற்பாடு செய்யப் போகிறார்களே [illegible] கின்ற காரணத்தால் [illegible]யம் போல இருக்கலானேன். என் காதல் நினைவு [illegible] மேலோங்கும்போது இந்த ஆர்மோனியத்தண்டை வந்து வாசிக்கத் தொடங்குவேன். அது மேலும் துயர் விளைவிக்குமென்கின்ற காரணத்தால் ஏதோ கன்னா பின்னா என்று வாசித்து விட்டுச் சென்று விடுவேன்."

"என்னடத்தைகளைக்கொண்டு என் புத்தி நிதானத்திலில்லை என்று என் தந்தை கருதி வந்தார். இப்படி இருந்து வந்த நான் தங்களைச் சந்தித்தபோது நடை முறைகளைக் கண்டு யூகித்துக் கொண்டே உங்களுக்கும் சந்தேகம் வரும் படியாக நடந்து கொண்டேன். அடுத்து மறு நாளும் தாங்களென்னைக் காண வந்த காரணத்தால் "எப்படியும் எனக்குப் பைத்தியமென்று அறிவிக்கப் பட்டிருப்பீர்கள்-அப்படியிருந்தும மீண்டும் விரும்பி வந்திருக்கிறீர்கள்" எனக் கண்டுகொண்ட காரணத்தாலேயே சம்மதத்தைத் தெரிவித்தேன். அதன் பிறகு என் தந்தையுடன் வந்தபோது நேர்மையையும் நம்பிக்கையும் கண்டு என்னையே ஒப்படைக்கிறேன்"

கடந்த கால நிகழ்ச்சிகளை அவள் கூறி வரும்போது அவளையே சந்தேகத்தோடு பார்த்துக் கொண்டிருந்த அவனிடம் "எனப்படிப் பார்க்கிறீர்கள்" எனக் கேட்டாள். அதற்கவன் "முதலில் உனக்குப் பைத்தியமில்லை என்ற முடிவுடனிருந்த நான், இப்போது உனக்குப் பைத்தியம் இருக்குமோ என்று சந்தேகப் படுகிறேன்" என்றான். அப்போது அவள் சிறிது கோபத்துடன்; சமுதாயத்தைப் பற்றிய என் முடிவு தவறானதல்ல என்று உணர்கிறேன். உண்மையைக் கூறினால் உன்மத்தமென்பார்கள். பொய்யைப்புனைந்துரைத்தால் புனித மொழி என்று போற்றுவார்களெனபது சரியாகத்தானிருக்கிறது என்றாள். அதற்கவன், தவறாக எண்ணிவிட்டாய்-நான் கூறவந்தது அதுவல்ல! இப்படி உன்னை நீயே துன்புறுத்திக் கொண்டிருந்திருக்கிறாயே என்றுதான் பரிதாபப்படுகிறேன் என்றான். அவளது அன்பையும் அருங்குணங்களையும் பலவாறு புகழ்ந்து பாராட்டி இன்பத்தை ஈடாகப் பெற்றான். எத்தனையோ விதங்களில் தங்களின் இணைப்பைப்பற்றிப் பேசி மகிழ்வதைவிட உலகோரால் வெறுக்கப்பட்டவனும்-விடுக்கப்பட்டவனுமான என்னை - உலகை வெறுத்து வாழ்வை வெறுத்து ஒதுக்கிவிட்டுத் தனிமையை நாடியிருந்த நீ ஏற்றுக் கொள்வதுமே இருவருக்கு

மாரு பெருத்த ஒறுறுமை ...ச் சேர்கிறது என ... ட்டினன்.

...லாவகையிலும் தன் இத...ல் இடம் பெற்றுவிட்டவ... நட்பு கிடைக்கப்பெற்ற ஒரே காரணத்தால் கடந்த காலத்தில் தனக்கேற்பட்ட துன்பங்களைச் சிறிதும் மீதி வைத்துக்கொள்ளாமல் அகற்றிவிட்டு அவனுடன் ஆனந்தக்கடலில் திளைத்தாள்.

காலையில் வேறெவரும் சந்திக்குமுன்னர் தன் நண்பனைச் சந்தித்துத் திருமணச் செய்தியைக் கூறியபோது அவனே கேட்டுத்திகைத்தான். எல்லோராலும் பைத்திய மென்று கருதப்பட்டிருந்தவள் உண்மையில் பைத்தியக்காரி அல்ல, என்பதையும், இவனுக்கு யார் பெண் கொடுப்பது என்று இறுமாந்திருந்தவர்கள் முன்னிலையில். இவனுக்கு நம்பெண்ணைக் கொடுக்காமல் போனேமே என்றெண்ணுகின்ற அளவுக்கு இருந்தது அவனது திருமண அறிவிப்பு. திருமணத்தில் எல்லோரும் கலந்து இன்புறச் செய்ததை விட - அவனுடைய கட்டாய அழைப்பை ஏற்று வந்திருந்தவர்களாகக் காணப்பட்டவர்கள் "முதலில் அவனை மணமகனாக ஏற்றுக் கொள்ள மறுத்தவர்கள் தான்," அவன் அவர்களை யெல்லாம் தன் இல்லாளுக்குச் சுட்டிக் காட்டி அவர்கள் கூறிய ஒவ்வொரு செய்திகளையும் விளக்கிக் கூறினன்.

அப்போது அவள், "அவர்கள் உங்களுக்குத் திருமணம் செய்துவைத்திருந்தால் நான் தனிமையில் நைந்துதானே மடிய நேரிட்டிருக்கும். எனவே இப்போது நான் அவர்களுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று கூறித் தனக்கே உரிய முல்லைச்சிரிப்பால் புது மணம் சேர்த்தாள்.

உலகைப் பல்வேறுகோணங்களிலே வரையிட்டு வைத்திருந்த அவன், உலகின் முழு வடிவம் எப்படிப்பட்டதாயிருக்கிறது என்பதைக் கண்டு கொண்டபின் தன் இன்ப உலகத்தின் எல்லை எங்கிருக்கிறதெனத் தேடிப் புறப்பட்டான் மனைவியின் துணையுடன். திருமணத்தின்பயன் அவன்பெரும் பணக்காரனாக ஆய்விட்டதுடன், தனது லட்சியங்களைத் தங்குதடையின்றி நிறைவேற்றினன். ஏசல்களையும் இகழ்ச்சிக் கணைகளையும் எறிந்துகொண்டிருந்தோரெல்லாம் புகழ்மாலையும் பாராட்டு மாலையும் வழங்கி அவனை வாழ்த்தினர். எதனாலும் மாருத-எதன் பொருட்டும் சிதையாத-இன்பத்திற்கும் புகழுக்கும் இருப்பிடமாக இல்லறத்தை ஆக்கி அதன் வழி நிற்பதென்ற உறுதியுடன் இணைந்திருந்தனர். ஒருமனப்பட்டபோதே திருமணம் பெற்றனர். அதிலும் இவர் மணம் மனம் நிறைந்ததுமட்டுமல்ல சிறப்பு மணமும் பெற்றது. ❁

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரசின் நிழலில் கக்கன் நிற்கப்பார்ப்பது ஒன்று மட்டும் நன்ருகத் தெரிகிறது!

திடீரென திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது, கக்கன் அவர்களின் கனல் கக்கும் பார்வை திரும்பியிருக்கிறது! ஒரு வேளை சட்ட சபையில் அண்ணவும் மற்றவர்களும் பேசும் பொழுதெல்லாம், தமது மனதிற்குள "இருங்கள், இருங்கள்! உங்களுக்கெல்லாம் சுட்சுடத் தரவேண்டும்" எனப் பல்லைக் கடித்துக் கொண்டிருந்துவிட்டு வலங்கைமான் பகுதிக்குப் போய், தமது அடுக்காத மொழிகளைத் தூவியிருக்கிருர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேசுவது உண்மையிலேயே "அடுக்கு" மொழிகள்! நியாயத்திற்கு நேர்மைக்கு அடுக்கும் மொழிகள்! இந்த நாட்டு வரலாற்றுக்கு, பண்பாட்டுக்கு அடுக்கும் மொழிகள்! உரிமையுடன், பெருமையுடன் ஒரு நாடு வாழ எல்லைக் கோட்டை அடுக்கித் தரும் மொழிகள்! இன்பத் திராவிடமாம் எழில் மாளிகையை எழுப்பிடும் பெருமுயற்சியில், அடிப்படைக் கற்களை ஒவ்வொன்ருக அடுக்கும் மொழிகள் அவை!

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேசுவது அடுக்கு மொழி என்ருல், கக்கன் போன்றவர்கள் பேசுகிறது "அடுக்காத" மொழிகள்! இந்த நாட்டுக்கு அடுக்காது! நீதி நேர்மைக்கு அடுக்காது! திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி அவர்கள் பழி தூற்றுவது உண்மையில் அடுக்காது!

அடுக்காத மொழியில், மராமத்து அமைச்சர் அவர்கள் வலங்கைமானில் நடைபெற்ற கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி ஏதேதோ "அடுக்கிக் கொண்டே" போயிருக்கிருர்! போகிருர், மந்திரியார், சட்ட சபையில் அதிகம் பேசாதவர், பேசும் ஆவலை அங்கு போய், கூட்டத்தில் தீர்த்திருக்கிருர்!

வலங்கைமானில் நடைபெற்றது காங்கிரசுக் கூட்டம்! நடந்த இடம் வலங்கைமான் ஜில்லா போர்டு பள்ளிக்கூடம்! பள்ளிக்கூடங்களில் மற்றக் கட்சியினர்கள கூட்டங்கள் நடத்த அனுமதிக்கப் படுவதில்லை! ஆனல் காங்கிரசுக் கூட்டம் மட்டும் நடத்த அனுமதிக்கப் பட்டுள்ளது! இது ஜன நாயகத்திற்கு அடுக்குமா? அதிலும் மந்திரி அவர்களே ஒரு பொது விதியை மீறி நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டது, அவருடைய மந்திரித் தன்மைக்கு அடுக்குமா!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி கனம் கக்கன் அவர்கள் கடுமையாக—தொடர்பு அற்ற முறையில் பேசியிருக்கிருர். அந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஜனப் பக்கீர் மகமது என்பவர், என்ன பேசினர் என்பதைப் பத்திரிகையில் வந்தபடி அப்படியே கீழே தந்திருக்கிறேம்!

**கூட்டத் தலைவர் தமது தலைமை உரையில் பேசும் பொழுது, காந்திஜி நினைவுக் கட்டிடம் கட்ட காங்கிரஸ் காரர்கள் ரூ. 13000 வசூலித்ததாகவும், கட்டிடம் முழுதும் கட்டி முடிக்காமல் பாதியில் நின்றுவிட்டதாகவும், வசூலித்த தொகைக்கும் செலவுக்கும் சம்பந்தப்பட்டவர்கள் கணக்கு கொடுக்க மறுக்கிருர்கள் என்றும், இது சம்பந்தமாக ஸ்ரீ கக்கன் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தபொழுது புகார் கடிதம் எழுதப்பட்டது என்றும் குறிப்பிட்டார். இப்பொழுது மாதம் மேற்படி கட்டிடத்திற்கு ரூ 30 வாடகை வருகிறது என்றும் அதன் காரணமாக வலங்கைமான் காங்கிரஸ் கோட்டை கல கலத்து விட்டது என்ருர்.**

மந்திரி கக்கன் எதிர்க் கட்சிகளை எடுத்தெறிந்து, "இது சொத்தை, இது சோடை, இது வேண்டாம்!" என்று பேசினர். கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர், காங்கிரசில் 13000 ரூபாய் வசூல் ஆகி, அதற்குச் சரிவரக் கணக்கில்லாமல் ஊழல் நிறைந்திருப்பதைக் காட்டுகிருர்!

காந்தியார் நினைவுக் கட்டிடத்துக்கு வாங்கப்பட்ட தொகை! காந்தியார் பெயரைச் சொல்லி வாங்கப்பட்ட பணம் சரியாகச் செலவழிக்கப் படவில்லை! கட்டிடம் பாதியளவில் நிற்கிறது! கட்டப்பட்ட பகுதியும் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது! வருகிற வாடகை எங்கோ போய்விடுகிறது!

இவ்வளவு புகார்களை கூட்டத் தலைவர், மந்திரி கக்கனிடம் முறை வைத்துச் சொல்லியுள்ளார். கக்கன் அவர்களுக்குத் தெரியாதா என்ருல், இப்பொழுது அவர் மந்திரி, மூன்பு சென்னை மாநிலக் காங்கிரசின் தலைவராக இருந்தபொழுது — தலைவர் கக்கனுக்கு புகார் அனுப்பப்பட்டது எனக் கூட்டத் தலைவர் கூறுகிருர்!

கனம் கக்கன் அவர்களே! முதலில் உங்கள் வீட்டில் இருக்கும் நாற்றத்தைப் போக்கி விட்டு, எதிர் வரிசை வீடுகளிலுள்ள குற்றங் குறைகளைக் கண்டுபிடிக்க வாருங்கள்!

"இதன் காரணமாக வலங்கைமான் காங்கிரஸ் கோட்டையே கல கலத்து விட்டது" என்று கூட்டத் தலைவர் கூறியதாகப் பத்திரிக்கைச் செய்தி தருகிறது!

ஐயா! வலங்கைமான் காங்கிரசு மட்டுமல்ல, அகில இந்திய காங்கிரசே அப்படித்தான் இருக்கிறது!

காந்தியார் பெயரைக் கூறி அகில இந்தியக் காங்கிரசும் மக்கள் ஆதரவைப் பெற்றது! மக்களிடம் பெற்ற ஆதரவைச் சரியான முறையில் பயன் படுத்தவில்லை! எதைச் சொல்லி மக்களிடம் ஆதரவு பெற்ருர்களோ, அந்தக் காரியம் நிறைவேறவில்லை! பாதி மனையாய், பாழடைந்த வெளியாய் இந்தியா இருக்கிறது! வாங்கப்பட்ட ஆதரவு, பெறுகின்ற பலன் ஊழல் முறையில் யார் யாருக்கோப் பயன் படுகிறது!

வலங்கைமான் காங்கிரசுக் கோட்டை மட்டுமல்ல, அகில இந்தியக் காங்கிரசுக் கோட்டையும் கல கலத்துதான் இருக்கிறது!

மராமத்து மந்திரியார் அவர்களே! முதலில் கலகலத்திருக்கும் காங்கிரசுக் கோட்டையில் சரிந்திருக்கும் கற்களை அடுக்கி, மராமத்து பார்க்கச் செய்து விட்டு பின் அடுக்குமொழி பேசுவோரின கட்டிடங்கள் பக்கம் வாருங்கள்! ❁

## மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

| | | |
|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. 15·00 |
| ஓராண்டு | ... | ரூ. 8·00 |
| ஆறுமாதம் | ... | ரூ. 4·00 |
| தனி இதழ் | ... | 16 காசு |

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

| | | |
|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. 18·75 |
| ஓராண்டு | ... | ரூ. 10·00 |

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ... | 20 காசு |

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

[311 சல்யூட் அடித்து விட்டு அவர்களை அழைத்துச் செல்கிறன்]

சப்: நம்மிடம் இப்போது இருக்கிற கேசுகளை முடிக்க முடியவில்லை. இந்தக் கேசுகளையும் மேலே ஏற்றிக் கொள்ள வேண்டாம். கேசுகள்பிடித்தாலும் கொஞ்சம் கௌரவமாக இருக்க வேண்டும். இப்போ வருகிற கேசுகளைப் பார்த்தால் ரொம்ப அவமானமாக இருக்கிறதே!

ஹெட்: ஆமாங்க. ஊரு ரொம்ப கெட்டுப் போச்சுங்க, நல்லகேசுகளே பிடிபட மாட்டேங்குது.

[தாயப்பப்பிள்ளை வருகிறர்.]

ஹெட்: ஏனய்யா! எப்போ பொழுது விடியும்னு பார்த்துக் கொண்டிருந்தாயோ? பெண்ணைப் பற்றி தகவல் கிடைத்தால் சொல்லியனுப்புவதாகச் சொன்னேனே அதற்குள் ஏன் வந்து விட்டீர்!

தாய: இல்லேங்க, பெண்ணைக் கண்டு பிடிச்சாச்சு.

ஹெட்: என்ன? பெண்ணைக் கண்டு பிடிச்சாச்சா?

தாய: ஆமாங்க. அவளைக் கூட்டி வர முடியவில்லை. அந்த வீட்டுக்காரன் அனுப்ப மறுக்கிறன்.

சப்: யாரவன்? எங்கிருக்கிறன்?

தாய: பெயர் கார்த்திகேயனும், காலேஜில் வாத்தியார் வேலையாம். அந்தப் பிள்ளையார் கோவிலுக்கு எதிர்த்த வீட்டில்தான் குடியிருக்கான். அங்கேதான் இந்தப் பெண் இருக்கு.

சப்: என்ன இது கேசு எப்படி எப்படியோ போகுதே! சரி (ஹெட் கான்ஸ்டேபிளைப் பார்த்து) நீ இந்த ஆளுடன் போய் விவரம் தெரிந்து கொண்டு வா. பிறகு பார்ப்போம்.

[ஹெட் கான்ஸ்டபிள் சல்யூட் செய்து விட்டு தாயப்பனுடன் செல்கிறர்.]

காட்சி 10

[கார்த்திகேயன் வீடு. கார்த்திகேயன் தமயந்தி, வனிதா, சேகரன், நல்ல மணி எல்லோரும் பேசிக் கொண்டிருக்கும் போது அங்கு திடீரென சப் இன்ஸ்பெக்டர் வருகிறர். வனிதாவும் தமயந்தியும் உள்ளே செல்கின்றனர்.]

சப்: மன்னிக்க வேண்டும்! நீங்கள்தானே மிஸ்டர் கார்த்திகேயன்.

கார்த்தி: ஆமாம்!

சப்: இங்கு வனிதா என்கிற பெண்...

கார்த்தி: இருக்கிருள்!

சப்: அந்தப் பெண்ணை நீங்கள் கட்டாயப் படுத்தி அழைத்து வந்திருப்பதாகப் புகார் செய்திருக்கிறர்கள்.

கார்த்தி: தவருனதாகும்.

சப்: நான் அந்தப் பெண்ணுடன் பேச வேண்டும் தனியாக!

கார்த்தி: நன்ருகப் பேசுங்கள்.

[எல்லோரும் எழுந்து செல்கிறர்கள் வனிதா வருகிருள்.]

சப்: உட்காருங்கள்.

சப்: [உட்காருகிருள்.] உங்கள் பெயர்?

வனி: வனிதா.

சப்: இங்கு எப்போது வந்தீர்கள்?

வனி: நேற்று மாலை.

சப்: யாருடன் வந்தீர்கள்?

வனி: நான் மட்டும்தான் தனியாக வந்தேன்.

சப்: மிஸ்டர் கார்த்திகேயனை உங்களுக்கு எப்படித் தெரியும்?

வனி: அவரது மனைவியார் தஞ்சாவூரில் எங்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் வசித்தார்கள்.

சப்: நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?

வனி: எஸ். எஸ். எல். சி. வரை.

சப்: இப்பொழுது உங்களுக்கு வயது?

வனி: 22 முடிகிறது.

சப்: என்ன? 22 முடிகிறதா! ஆனல் பார்ப்பதற்கு அப்படித் தெரியவில்லையே.

வனி: இருங்கள் என்னுடைய சர்டிபிகேட் புத்தகத்தை கொண்டு வருகிறேன்.

[வனிதா எழுந்து சென்று ஒரு புத்தகத்தை எடுத்து வந்து சப் இன்ஸ்பெக்டரிடம் கொடுக்கிருள். அவர் அதைப் பிரித்துப் பார்க்கிறர்.]

சப்: இடது முழங்காலில் ஒரு தழும்பு உண்டா?

வனி: வலது முழங்காலில் தான் இருக்கிறது.

சப்: ஆமாம்! வலது முழங்காலில் தான். சரி, நீங்கள் உங்கள் வீட்டை விட்டு இந்த வீட்டிற்கு வந்ததின் நோக்கம் என்ன?

[வனிதா பேசாமல் இருக்கிருள்.]

தயவு செய்து சொல்லுங்கள். ஏனென்ருல் நான் இப்பொழுது மிஸ்டர் கார்த்திகேயனை அரெஸ்ட் செய்ய வந்திருக்கிறேன்.

வனி: வேண்டாம்! வேண்டாம்! அவர் நல்லவர். நான் சொல்லி விடுகிறேன். எனக்குத் தாய் தந்தையர் கிடையாது. குழந்தைமுதல் என்னை வளர்த்துக் காப்பாற்றி படிக்க வைத்தவர்கள் அந்த செண்பக அம்மாள்தான். அவர்களை நான் பெற்றெடுத்த அன்னையாகவே மதிக்கிறேன். ஆனல் நான் வளர்ந்த இடம், என்றும் சமுகத்தால் இழித்துக் கூறப்படும், ஆனல் அதே சமயம் அழிக்க விரும்பாத இடம். தாசியர் வீட்டிலே நான் வளர்ந்தேன். ஆனல் அவர்கள் கூறிய வழியைக் கடைபிடிக்க நான் விரும்பவில்லை. அவர்களது விருப்பம் நான் ஒரு சினிமா நட்சத்திரமாக வேண்டும் என்பது. நான் விரும்பியது அமைதியான குடும்ப வாழ்வை. சூழ்நிலைகள் என்னுடைய பண்பிற்கு களங்கம் தரக்கூடிய வகையில் வளரவே நான் அவ்விடத்தைவிட்டு வெளியேற வேண்டியவளானேன். வெளியேறினேன். என்னிடத்தில் அன்பு காட்டக்கூடியவர்களிடம் இன்று இருக்கிறேன். இதுதான் என் கதை.

சப்: என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் மனதைப்புண்படுத்தியதாக எண்ண வேண்டாம். என் கடமையைச் செய்ய இவ்வளவும் கேட்க வேண்டியிருந்தது.

வனி: அவரைக் கைது செய்ய மாட்டீர்களே?

சப்: கைது செய்ய வேண்டியவர்கள் இங்கில்லை. நீங்கள் போகலாம்.

[சப்-இன்ஸ்பெக்டர் புத்தகத்தை வனிதாவிடம் கொடுக்கிறர். வனிதா செல்கிருள். கார்த்திகேயன், சேகரன் நல்ல மணி வருகிறர்கள்.]

சப்: மன்னிக்க வேண்டும். உங்கள் எல்லோருக்கும் தொல்லை கொடுத்து விட்டேன்.

கார்த்தி: நீங்கள் உங்கள் கடமையைத்தானே செய்கிறீர்கள்!

சப்: வனிதாவைப் பற்றி அவர்கள் கொடுத்த விபரமெல்லாம் தவருக இருக்கின்றன. இதற்கு அவர்களை நான் சும்மா விடப் போவதில்லை.

கார்த்தி: சார்! இன்னொரு விஷயமும் உங்களுக்குத் தெரிய வேண்டும். இவர்கள் என்னுடைய மாணவர்கள். இவர் பெயர் சேகரன், இவர் நல்ல மணி. சேகரன் வக்கீல் பொன்னம்பல முதலியாரின் மகன், வனிதாவைத் திருமணம் செய்து கொள்ளுவதாக இருக்கிறர்.

சப்: ஒகோ, அப்படியா விஷயம்! ஆக வனிதா இங்கு வந்திருப்பதற்கு சேகர்தான் காரணமாக வேண்டும். நான் கைது செய்வதாக இ... தால் சேகரையும் சேர்த்... கைது செய்யவேண்டும்.

சேகர்: அப்படியாவது ... செய்யுங்கள் சார்! அப்... தாவது இந்தத் திருமண... திற்கு என் பெற்ருேரின் ... மதம் கிடைக்குமா என்... பார்க்கலாம்.

சப்: அப்படியென்ருல், பெ... ருேரின் சம்மதமில்லாம... யே திருமணம் செய்... கொள்ளத் துணிந்து வி... டீர்களா?

சேகர்: வேறு வழி இல்லை!

சப்: மிஸ்டர் கார்த்திகேய... வனிதாவின் கதையை... கேட்டதிலிருந்து எப்படி... வது இந்த விஷயத்தி... உதவி செய்ய வேண்டு... என்று முடிவு செய்... கொண்டு விட்டேன். இ... களது திருமணம் சிறப்பா... நடைபெற என்னுலான உ... வியையும் செய்கிறேன்.

கார்த்தி: வனிதா, அதிர்ஷ... சாலிதான். இல்லா வி... டால் இவ்வளவு எளிதாக... காரியங்கள் நடைபெறுமா...

சப்: அதிர்ஷ்டம் என்று த... யாக ஒன்றும் கிடையா... சூழ்நிலையையும் சந்தர்ப்பங்... ளையும் பயன்படுத்திக் கொ... ளும் முறையில்தான் நா... பயனடைகிருேம். ச... எனக்கு இதுவரை நடந்... வற்றை விபரமாகச் சொ... லுங்கள். என்னுலான உத... யை நான் செய்கிறேன்.

[தமயந்தியும் வனித... வும் எல்லோரு... கும் காப்... கொண்டு வரு... ருர்கள்.]

கார்த்தி: முதலில் காப்பியை... சாப்பிடுங்கள். பிறகு நடந்... விஷயம் எல்லாவற்றையு... சொல்கிருேம்.

காட்சி 11

[செண்பகம் வீடு... செண்பக... தாயப்பப்பிள்ளை... பேசிக் கொண்டி... ருக்கிருர்கள்.]

செண்: எனக்கென்ன மே... கேசு கீசுன்னு சொல்றது... பிடிக்கவில்லை. அவள் இவ... டப் படியே கல்யாண... செய்துகொள்ளலாம் என்று... கூறி, அவளைப் போய்... அழைத்து வாருங்கள்.

தாய: சரிதான், இவ்வள... தூரம் கேஸ் போட்டுவிட்டு... இப்பொழுது போய் கூப்... பிட்டா வருவாளா?

செண்: சரி, உங்களால் முடியா... விட்டால், நானே போகி... றேன். அவளை அழைத்து... வர.

[சப் - இன்ஸ்பெக்ட... உள்ளே வருகி... ருர்.]

தாய: ஐயா, வாங்க, உட்கா... ருங்க.

செண்: வாங்க.

அந்தப்பெண்ணைப்பற்றி பொய்யான விபரங்களை கூறி யதற்காக உங்களைத்தான் நான் கைது செய்யப் போகிறேன்.

ய: ஐயையோ! நாங்க என்ன பொய்யா சொன்ேனும்.

ப்: பெண்ணுக்கு பதினேழு வயதுதான என்று சொன்னீர்கள். அந்தக் கார்த்திகேயன் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றிருக்கிருர் என்று ரிப்போர்ட் செய்திருக்கிறீர்கள்.

சண்: ஐயா. எங்களை ஒண்ணுஞ் செய்யாதிங்க. மன்னிச்சிடுங்க அவள் இஷ்டப்படியே நடந்து கொள்கிறேன் அவன் இந்த வீட்டை விட்டுப் போனதிலிருந்து எனக்குப் பைத்தியம் பிடித்த மாதிரி இருக்கிறது. எப்படியாவது அவளை அழைத்துக் கொண்டு வந்து சேர்த்து விடுங்கள். அவள் இஷ்டப்படியே கல்யாணம் செய்து வைக்கிறேன்.

ப்: அப்படி வாங்க வழிக்கு. என்னையா சரிதானே?

ாய: அம்மாவே சொல்லும் போது நான் மறுத்துப் பேச முடியுமா.

ப்: அடுத்த வீட்டில் இருக்காரே வக்கீல். அவருடைய மகனைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று சொல்கிறது அந்தப் பெண்.

சண்: அது முன்பே எனக்குத் தெரியும். அப்படியே செய்து வைக்கலாம். ஆனல் அடுத்த வீட்டுக்காரர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமே

ப்: அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் இந்தக் கல்யாணத்திற்கு நீங்கள் ஒத்துக்கொள்வீர்களா?

சண்: சரிதானுங்க

ப்: என்ன தாயப்பா?

ாய: சரிங்க

ப்: தாயப்பா! இனிமேல் அந்த வச்சிரவேலு வீட்டுப் பக்கம் போகக் கூடாது இல்லை யென்ருல் அவர்களோடு நீயும் என்றைக்காவது கம்பி எண்ண வேண்டும்.

ாய: இனிமேல் அந்தப் பக்கம் தலை வைத்துக் கூட படுக்க மாட்டேனுங்க!

ப்: சரி, இன்னும் கொஞ்ச நேரத்தில் வனிதாவும் மற்றவர்களும் இங்கு வருவார்கள் இனிமேல் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும். நான் போய் அவர்களை அனுப்பி வைக்கிறேன்.

[சப் இன்ஸ் பெக்டர் போகிருர்]

### காட்சி 12

[பொன்னம்பல முதலியார் வீடு பொன்னம்பல முதலியார் உட்கார்ந்திருக்கிருர். சப் - இன்ஸ்பெக்டர் வருகிருர்]

ப்: நீங்கள் தானே பொன்னம்பல முதலியார்

ான்: ஆமாம்.

சப்: உங்கள் மகன தானே சேகரன்.

பொன்: ஆமாம், என்ன சார், என்ன ஆபத்து அவனுக்கு!

சப்: ஆபத்து ஒன்றுமில்லை. அவன் வீட்டை விட்டு வெளியேறியது உண்மை தானு?

பொன்: உண்மைதான்! என் குடும்பத்திற்கு ஒரு அவமானச் சின்னமாகத தோன்றி விட்டான். நான் தான் வீட்டை விட்டுப் போகும் படிச் சொன்னேன்.

சப்: இப்பொழுது அவனைக் கைது செய்வது பற்றியே உங்களிடம் கேட்க வந்தேன்!

பொன்: ஏன் என்ன செய்து விட்டான். எதற்காக கைது செய்யப் போகிறீர்கள்!

சப்: அடுத்த வீட்டிலிருக்கும் இளம் பெண்ணை கடத்திச் சென்றதாக குற்றம் இருவரையும் பிடித்து வைத்திருக்கிருேம்.

பொன்: இல்லை, அந்தப்பெண் தானுக ஓடிவிட்டதாகச் சொன்னுர்கள்.

சப்: பொட்டு என்ற வேலைக்காரப் பையன் இருக்கிருனு

பொன்: ஆமாம்.

சப்: அவனைக் கூப்பிடுங்க.

[பொன்னம்பல முதலியார் பொட்டுவை கூப்பிடுகிருர் பொட்டு வருகிருன்]

சப்: இந்தக் கடிதத்தை நீ அடுத்த வீட்டிலிருக்கும் பெண்ணிடம் கொண்டுபோய் கொடுத்தாயா?

பொட்: ஆமாங்க...

சப்: யார் கொடுக்கச் சொன்னது.

[பேசாமல் நிற்கிருன்]

பதில் சொல்றியா இல்லை...

பொட்: சின்ன ஐயா கொடுத்தாருங்க.

சப்: சரி நீ போ

[போகிருன் கடிதத்தை பொன்னம்பல முதலியாரிடம் கொடுக்கிருர்.]

பொன்: (கடிதத்தைப் படித்து விட்டு) அவமானம! அவமானம்! (தலையில் அடித்துக் கொள்கிருர்.)

சப்: சார், கொஞ்சம் தைரியமாக இருக்க வேண்டும். முதலில் உங்களிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு பிறகு கவனிக்கலாம் என்றுதான் இங்கே வந்தேன்.

பொன்: சார்! சார்! அவன் கோர்ட்டிலே ஏறினுல் அந்த அவமானத்தை நான் தாங்கிக் கொள்ள முடியாது. ஊரிலே ஒரு பெரிய வக்கீல் என்ற பெயரைப் பெற்றிருக்கிறேன். சார் எப்படியாவது நீங்கள் உதவி செய்து இதை......

சப்: இதில் நான் என்ன உதவ முடியும். பெண் வீட்டார் ரிப்போர்ட் செய்திருக்கிருர்கள். நாங்கள் எங்கள் கடமையைச் செய்யவேண்டுமே.

பொன்: சார்! அந்தக் கல்யாணத்திற்குக்கூட சம்மதித்து விடுகிறேன். இந்த மாதிரி ஒரு வழக்கு வந்தால் என்றைக்குமே இழிவாகப் பேசுவார்கள். நீங்கள் உதவினுல்..

சப்: கடமையைச் செய்யக் கூடாது என்று சொல்கிறீர்களா?

பொன்: இல்லை, இல்லை. நீங்கள் அந்தப் பெண் வீட்டாரைக் கண்டு பேசினுல் ஒரு சமாதானத்தை ஏற்படுத்தலாம்.

சப்: அது சரி, ஆனல் கல்யாணத்தைப் பற்றிக் கேட்டால்!

பொன்: கல்யாணத்திற்கு நான் ஒத்துக் கொள்கிறேன்.

சப்: சரி, அப்படியென்ருல் அவர்களிடம் பேசிப் பார்க்கிறேன்.

பொன்: எப்படியாவது பேசி முடித்து இந்த வழக்கை வாபஸ் பெற செய்து விடுங்கள்.

சப்: சரி, அவர்களுடன் பேசி அவர்களை அழைத்துக் கொண்டு மாலை வருகிறேன். மற்ற விஷயங்களை நேரில் பேசிக்கொள்ளலாம்.

பொன்: அப்படியே செய்யுங்கள்.

[சப் - இன்ஸ்பெக்டர் போகிருர்.]

பொன்: கற்பகம்! கற்பகம்!! 'அவமானம்! அவமானம்!!

[எழுந்து அங்குமிங்கும் முணுமுணுத்தபடி நடக்கிருர்.]

(முற்றுப்பெற்றது)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டித நேருவை டில்லிப் பாதுஷா என்றும், பிரெஞ்சு மன்னர்கள் வழி என்றும் சொல்வது குறித்து சிலர் வருத்தப்படலாம்! சிவாஜியின் வரலாற்றையும் மராட்டியத்தின் எழுச்சியையும் குறிப்பிடுவதற்காக மட்டும் அவரை டில்லி பாதுஷா என்று கூறவில்லை! பண்டித நேருவை மிகவும் பாராட்டுகிற இங்கிலாந்துப் பத்திரிகைகளில் ஒன்ருன "**மான்செஸ்டர் கார்டியன்**" என்ற பத்திரிகை சென்ற மே மாதத்தில் எழுதிய தலையங்கம் ஒன்றில் பண்டித நேருவைப் பற்றி எழுதும் பொழுது "**புது டில்லியிலிருக்கிற ஆட்சி நிலை, 18வது நூற்ருண்டைச் சேர்ந்த ஐரோப்பிய மன்னர்களின் அரண்மனைகளில் இருந்த நிலைமையைப்போலவும், இந்திய மகாராஜாக்களின் கொலுமண்டப நிலைமையைப்போலவும் இருக்கிறது!**" எனக் குறிப்பிட்டது!

பதினெட்டாவது நூற்ருண்டு முக்கியமாக ஐரோப்பிய மன்னர்கள் என்ருல் யாரார்? பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னிருந்த 14-வது லூயி, 15-வது லூயி, 16-வது லூயி ஆகிய பேர்போன மன்னர்கள் அப்பொழுதுதான் இருந்தார்கள்! அவர்களுடைய ஆட்சி நிலைமை எப்படி இருந்தது? மக்களை அடக்கி, ஒடுக்கி, ஆணவத்துடன் அவர்கள் ஆண்டார்கள்! தரித்திரம் மிகுந்த நாட்டில் கோலாகலமான தர்பார்களை அவர்கள் நடத்தி வந்தார்கள்! கடைசியாக மக்கள் உரிமைக் குரல் எழுப்பிய பொழுது, எதேச்சாதிகாரங்கள் கவிழ்ந்தன, சாம்ராஜ்யங்கள் சிதறின!

நேரடியாக அடக்க முடியாத நிலையில், சிவாஜியை சிறைப் படுத்தினுர்கள் டில்லி அரசினர்! அதைப்போல, நேரடியாக மக்களின் ஆதரவு இல்லாமல், சுற்றி வளைத்து சூழ்ச்சிகள் பல செய்து, டில்லி ஆதிக்கத்தினர் மராட்டியத்தைச் சிறைப் படுத்தினர்! சிறையிலே மராட்டியத்தைப் போட்டு விட்டு, சிவாஜியின் சிலையைத் திறந்த பிரதமர் சென்ருர்! மராட்டியர்கள் அதை எதிர்த்தனர்!

வரலாறு திரும்பாமற் போகாது, புதிய டில்லி பாதுஷாக்களுக்குப் பாடம் கிடைக்காமற் போகாது!


நாஞ்சில் மாவட்ட

## தி. மு. கழக 2-வது மாநாடு

**டிசம்பர் 27, 28ம் நாட்களில்**

**நாகர்கோயிலில் நடைபெறும்**

| டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர் | மதுரை—டாக்டர் |
| --- | --- |
| ஈ. வி. கே. சம்பத் | எஸ். அருணசலம் |
| அவர்கள் தலைமை தாங்குகிருர், | அவர்கள் மாநாட்டைத் திறந்துவைக்கிருர். |

**அண்ணு, – இரா. நெடுஞ்செழியன்**

மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

**இரு நாட்களிலும் இசை அரங்கு - நாடகம் ஆகியவை உண்டு**


"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா செழியன், எம். ஏ.—(தொலைபேசி எண்: 55697